பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுபர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 09 திங்கட்கிழமை (25-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:335

பின் கதவினாலும் முன் கதவினாலும் இலங்கைக்குள் இந்தியா தலையீடு!

பிரதேச வல்லாதிக்கப் பிடி இறுகும் அறிகுறி

கொழும்பு,ஒக்.25

1980களின் கடைசியில் இலங்கைக்குள் நேரடியாகத் தலையிட்டு கையைச் சுட்டுக் கொண்டு பின்னர் பின்வாங்கி ஒதுங்கியிருந்த இந்தியா, இப்போது மீண்டும் இலங்கைக்குள் பின் கதவாலும் முன் கதவாலும் தலையீடு செய்யத் தயாராகிவிட்டது என இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்குப் பயந்து பாதுகாப்புத் தேடி அலையும் கொழும்பு அரசுக்கு அடைக்கலம் தரும் பாணியில் இலங்கையுடன் நேரடியாகப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இந்தியா முன்வந்துள்ளது.

அதன்மூலம் இலங்கை விவகாரத்துக்குள் முன் கதவால் மூக்கை நுழைக்கும் இந்தியா, மறைமுக வழியில் பின்புறமாகவும் இலங்கை விடயத்துக்குள் தலையிடத் தவறவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தூரத்தப்பட்ட கருணாவையும், இதுவரை தனது கைக்கூலிகளாக இந்தியாவில் தஞ்சம் புகுந்து தங்கியிருந்த ஈ.என்.டி.எல்.எவ்வினரையும் கூட்டுச் சேர்த்து இலங்கைக்குள் செயற்பட வைத்து அதன் மூலம் பின் வாசலால் மூக்கை நுழைக்கிறது இந்தியா.

ஈ.என்.டி.எல்.எவ். - கருணா கூட்டுச் செயற்பாட்டின் பின்னணியில் இந்திய நெறிப்படுத்தல் இருப்பது பற்றிய விவரமான தகவல்களை சில இணையத்தளச் செய்தி நிறுவனங்கள் விலாவாரியாக வெளியிட்டு வருகின்ற

இலங்கை அரசின் அண்மை செயற்பாட்டில் அமெரிக்கத் தொடர்பு [illegible] இருப்பதை இந்தியா உணர்ந்துள்ளது என்றும் - இதை முறியடித்து, இந்தப் பிரதேசத்தில் தனது வல்லாதிக்க நிலையை உறுதிப்படுத்தவே இந்தியத் தரப்பு இலங்கை விடயத்துக்

(18ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் முக்கிய முடிவு அடுத்த ஞாயிறு வெளியாகும்?

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேசுவது பற்றியதாக இருக்கும்

கொழும்பு,ஒக்ரோபர்25

அமைதி முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முக்கிய தீர்மானம் ஒன்று அடுத்த ஒரு வார காலத்துக்குள் வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

தற்போது விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் - ஒஸ்லோ இணக்கப்பாட்டுக்கு அமைவாக - விடுதலைப் புலிகளோடு தமது அரசு பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றது என்ற முடிவை பெரும்பாலும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெற்றாலும் அவை ஒஸ்லோ பிரகடனத்துக்கு அமைவாகவே நடக்கவேண்டும் என்பதைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரனும் ஒரு பகிரங்கப் பிரகடனம் மூலம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பின்னர் அதன் முதலாவது கூட்டம் அடுத்த ஞாயிற்றுக்கிழமை (31ஆம் திகதி) நடைபெற இருக்கின்றது.

ஜனாதிபதியின் முடிவு அந்தக் கூட்டத்தில் வைத்து அவரால் வெளியிடப்படலாம் அல்லது ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றும் வழமையான விசேட உரையின் மூலம் தமது முடிவை வெளிப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2003 டிசெம்பர் முதல் வாரத்தில் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர், அந்தப் பேச்சுக்களுக்கு அனுசரணைப் பணியாற்றிய நோர்வேத் தரப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

"ஐக்கிய இலங்கைக்குள், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஷ்டிமுறையின் கீழ், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கு இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பினரும் இணங்கியுள்ளனர்." - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

சம்பூரில் புலிகளின் விமான ஓடு தளம்?

புலனாய்வு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,ஒக.25

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள சம்பூர் என்னுமிடத்தில் விமான ஓடுபாதை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவது தொடர்பாகத் தகவல் கிடைத்திருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்றை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விமான ஓடுபாதை அமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு கிலோமீற்றர் நீளமுடைய நிலப்பரப்பு தற்போது டோஸர்களைக் கொண்டு செவ்வை பண்ணப்பட்டு வருவதாகவும், படைப் புலனாய்வுப் பிரிவை மேற்கோள் காட்டி அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பை அண்மித்த பகுதியில் சுமார் 100 அடி உயரத்திலான தகவல் பரிமாற்றுக் கோபுரமொன்று விடுதலைப்

(18ஆம் பக்கம் பார்க்க)

சமாதான முயற்சிகளின் தேக்க நிலைக்கான உண்மைக் காரணத்தைப் புரிய வைத்தோம்!

நாடு திரும்ப முன்னர் தமிழ்ச்செல்வன் செவ்வி

லண்டன்,ஒக்.25

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்திருப்பதற்கான உண்மையான காரணத்தையும் அதனால் மனிதாபிமான ரீதியில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளையும் சர்வதேச சமூகத்துக்குப் புரியவைக்க எமது பயணம் பெரிதும் உதவியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியல் குழுவினர் நேற்றிரவு சுவிற்ஸர்லாந்தில் இருந்து கொழும்பு திரும்பினர்.

கொழும்புக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஜெனீவாவில் இருந்து பி.பி.ஸி. தமிழோசைக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில் அவர் கூறியதாவது:-

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்துத் தவறான கருத்துக்களே தமிழ்த் தேசவிரோத சக்திகளால் பரப்பப்பட்டுவந்தன. இதனை முறியடிக்கும் சந்தர்ப்பமாக எமது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தைப் பயன்படுத்திக் கொண்டோம். எமது உண்மையான நிலைப்பாட்டையும் நியாயத் தன்மையையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறினோம். இதன்மூலம் எமது உண்மை

(18ஆம் பக்கம் பார்க்க)

சபாநாயகர் பதவி: தம்மாலோக்க தேரர் மறுப்பு

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரர், நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு போட்டியிடவுள்ளார் என்று வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

தற்போதைய சபாநாயகரான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அவரை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு, உடுவே தம்மாலோக்க தேரரை சபாநாயகராக்குவதற்கு ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு முயற்சித்து வருவதாக வெளியான செய்திகள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசமைப்பை மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, தமக்குச் சார்பான ஒருவர் நாடாளுமன்றச் சபாநாயகராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது.

எனினும், சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் ஒருவரை அந்தப் பதவிக்கு போட்டியிடச் செய்து வெற்றியீட்டுவது சாத்தியமில்லை என்று கரு

(18ஆம் பக்கம் பார்க்க)

எழுதுமட்டுவாழில் மின்னல் தாக்கி சிப்பாய் பலி!

கொழும்பு,ஒக.25

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுமுன் தினம் அதிகாலை இடி மின்னல் தாக்கியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

அதிகாலை 1.40 மணியளவில் காவலரண் ஒன்றில் கடமையில் இருந்த சிப்பாயே மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்குரஸ பகுதியைச் சேர்ந்த சுகததாஸ என்ற அந்தச் சிப்பாயின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது. (ஐ)

மாணவர்களுக்கு!

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு உதயனில் வெளியாகி வரும் வினாத்தாள்களின் வரிசையில் நாளை (26.10.2004) செவ்வாய்க்கிழமை கணிதம் பகுதி I, பகுதி II ஆகிய வினாத்தாள் வெளிவரும். உங்கள் பிரதியை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

தலைவரும் மக்களும் உறுதியுடன் இருப்பதால் இன விடுதலையை எவரும் தடுத்துவிடமுடியாது

இந்தியப்படையால் கொலையுண்டோரின் அஞ்சலி நிகழ்வில் செம்மணன்

சாவகச்சேரி,ஒக்.25

எமது இனத்தின் நிரந்தர விடுதலையில் தலைவரும் மக்களும் உறுதியுடன் இருப்பதால் இந்த விடுதலையை எவரும் தடுத்துவிடமுடியாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

சாவகச்சேரியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 17ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி நவீன சந்தை வளாகத்தில் நேற்றுக்காலை பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலர் ம.மாயவேனாட் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய செம்மணன் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய இராணுவம் இந்த மண்ணில் காலடி வைக்கின்றபொழுது எமது தலைவர் தொடக்கம் மக்கள் வரை மிக நம்பிக்கையுடனும்தான் இருந்தோம். அதோடு உரிமையுடன் கூடிய விடுதலை எமது மக்களுக்கு வரப்போகின்றது என்ற உணர்வு எல்லோரது மனத்திலும் பதிக்கப்பட்டிருந்தது.

அந்த வருகைக்குப் பின்னால் நடந்த சம்பவங்கள் ஒட்டுமொத்தமான தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கின்ற வகையிலேயே அமைந்தன.

பல இழப்புக்களை நாம் எல்லோரும் சந்தித்தோம். இந்த ஒக்ரோபர் மாதம் எங்கள் மக்களையும் போராளிகளையும் தளபதிகளையும் இந்திய இராணுவத்தின் செயற்பாட்டின் மூலம் இழந்த மாதமாகவே இருந்தது.

லெப்.கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளையும் எங்கள் விடுதலைக்காக அதேவழியில் போராடிய தியாகி லெப். கேணல் திலீபனையும் இழந்தோம். இதனால், இந்திய இராணுவத்திற்கு எதிராக நாங்கள் யுத்தம் செய்யவேண்டிய நிலையும் அந்தக் காலத்தில் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடந்த படுகொலைகள், பிரம்படிப் பகுதியில் நடந்த 45 அப்பாவித் தமிழ் மக்கள் கனரக ஆயுதம் பொருத்தப்பட்ட டாங்கியினால் நெரித்துக் கொல்லப்பட்ட சம்பவம், வல்வெட்டித்துறை படுகொலைகள் எனப் பல தமிழ் மக்களது உயிர்கள் அழிக்கப்பட்டன.

எமது போராளிகளும் எமது தளபதிகளும், எமது தலைவரும் எங்கள் மக்களின் ஒட்டுமொத்தமான பங்களிப்புடாக உலகத்தின் நான்காவது வல்லரசு என்கின்ற இந்திய இராணுவத்தை இந்த மண்ணில் இருந்து அனுப்பிய சம்பவங்கள் நாம் அறிந்ததே.

பல நூற்றுக்கணக்கான போராளிகளின், தியாகத்திற்கு மத்தியில் பல இராணுவ ரீதியான தாக்குதல்களுக்கு மத்தியில் இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்து அனுப்பப்பட்டது. இச்சம்பவங்கள் - இந்த நினைவுகள் நிச்சயமாக நினைவுகூரப்படவேண்டும்.

எங்கள் தமிழினம் இருக்கும்வரை இந்த நிகழ்வுகள் இந்த மண்ணில் நினைவுகூரப்படவேண்டும்.

எங்கள் எதிர்கால சந்ததிக்கு இந்த விடுதலைக்காக நாம் கொடுத்த உயிர்த்தியாகங்களைச் சொல்லவேண்டும்.

எங்கள் விடுதலைக்கான பணிகளையும் விடுதலைக்கான பங்களிப்புக்களையும் இந்த மண்ணில் இருக்கின்ற ஒவ்வொரு தமிழனும் செய்வதினூடாக எமது விடுதலையை விரைவுபடுத்த முடியும்.

1987ஆம் ஆண்டு சமாதானம் என்ற அடிப்படையில்தான் இந்திய இராணுவம் இந்த மண்ணில் காலடி வைத்தது. அதேபோன்று ஒரு காலப்பகுதியே இப்போதும் இருக்கிறது.

ஆகவே அன்று எமது மக்களும் எங்கள் தலைவரும் விழிப்போடு இருந்தபடியால், எங்கள் விடுதலை அமைப்பையும் தமிழினத்துக்கான விடுதலையையும் எவருமே அழிக்கமுடியாதிருக்கின்றது.

இன்றைய சூழலில் நாம் விழிப்புணர்வுடனும் உணர்வுடனும் இருப்போமெனில் நிச்சயமாக விடுதலைப் போராட்டத்தை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரை சாவகச்சேரி வணிகர் கழக உறுப்பினர் எஸ். தவச்செல்வம், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றினர்.

நினைவுப் படத்திற்கான சுடரை சாவகச்சேரி வணிகர் கழக உறுப்பினர் ந.சற்குணராசா ஏற்றியதைத் தொடர்ந்து நினைவுப் படத்திற்கான மலர்மாலையை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சி.செம்மணன், தென்மராட்சி, அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், சர்வதேச தமிழீழக மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதரன் ஆகியோர் அணி வித்தனர்.

தொடர்ந்து மாவீர்கள், ஆகுதியாகிய பொதுமக்கள் ஆகியோருக்கு அகவணக்கம் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுமக்கள், வணிகர்கள் என பலர் மலரஞ்சலி செலுத்தினர்.

சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் பகீரதரன், தென்மராட்சி எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரா ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர். பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (4-31)

பரிசில் நாள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பரிசில் நாள் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.45 மணிக்கு அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

கைத்துப்பாக்கிகளுடன் இருவர் கைது!

கொழும்பு,ஒக்.25

வென்னப்புவ பகுதியில் சட்டவிரோதமாகக் கைத்துப்பாக்கி வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இத்தாலியில் தயாரிக்கப்பட்ட இக்கைத்துப்பாக்கிகளை அந்நாட்டில் இருந்து வந்த ஒருவரிடமே தாம் வாங்கினர் எனச் சந்தேகநபர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இத்துப்பாக்கிகளுக்குரிய பல ரவைகளையும் அவர்களிடமிருந்து தாங்கள் மீட்டனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-க)

உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா

குடத்தனை,ஒக்.25

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடத்தும் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபை செயலாளர் ஏ.எம்.ஜோசெப் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். கே.சிவாஜிலிங்கம், கி.சிவனேசன், செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா கலந்துகொள்வார். (ஐ-78)

கிணற்றில் வீழ்ந்த சிறுமி மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

கிணற்றுள் தண்ணீர் அள்ளிய வேளையில் தவறி வீழ்ந்த சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 7 மணியளவில் மண்கும்பான் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மண்கும்பான் அ.த.க. பாடசாலை மாணவியான அமரசிங்கம் தர்சினி(வயது 10) என்பவரே உயிரிழந்தவராவார். (10)

சூசை, தமிழ்ச்செல்வன் குழுவினர் இன்று கிளிநொச்சி திரும்புவர்

கொழும்பு,ஒக்.25

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூருக்குச் சென்றிருந்த கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை இன்று அதிகாலை 2 மணிக்கு நாடு திரும்ப இருந்தார்.

அவருடன் கூடச்சென்றிருந்த மேலும் மூவருடன் நேற்றுப் பகல் 12.30 மணிக்கு அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைய இருந்தார். எனினும், இறுதி நேரத்தில் பயண ஒழுங்கு மாற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று வாரங்களாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரும் இன்று அதிகாலை கட்டுநாயக்கவை வந்தடைய இருந்தனர்.

சூசையும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரும் கட்டுநாயக்காவிலிருந்து இன்று காலையில் விமானப் படை ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்படுவர். (ஐ-க)

கொழும்பு லியோக் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ. முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.25

கொழும்பு வட்ட லியோ கழகம் வன்னியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சையை நடத்தவுள்ளது.

வன்னியில் கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கே இந்தப் பரீட்சை நடத்தப்படும்.

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் இலவசமாக இப்பரீட்சை நடத்தப்படும்.

எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் இப்பரீட்சையை நடத்த ஏற்பாடாகியுள்ளது. (ஐ)

இரவில் கடைகளை உடைத்து திருடும் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடைகளை உடைத்துத் திருடும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். நகரம் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக கடைகள் உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருக்கின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பெரும்பாலான கடைகளின் முன்கதவுப் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன என்பது பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திட்டமிட்ட வகையில் இத்திருட்டுக்கள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் - பொலீஸார் கோரியுள்ளனர். (ஐ-3)

யாழ். பல்கலைக்கழகத்தில் 'செவ்விளக்கு' மக்கள் அரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். பல்கலைக்கழகத்தில் 'செவ்விளக்கு' என்னும் பொதுமக்கள் ஆற்றுகை ஒன்று இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையைச் சேர்ந்த நாடகமும் அரங்கியலும் மாணவர்கள் இந்த ஆற்றுகையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சீன, பீஜிங் ஒபேரா வடிவமான 'செவ்விளக்கு' பல்கலைக்கழக மண்டபங்களை அரங்குகளாக மாற்றிப் பிரமாண்டமான முறையில் நிகழ்த்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளில் மாலை 6 மணியளவில் இந்த அரங்கு இடம்பெறும். (ஐ)

இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.25

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை கால் இறுதி ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

16 வயதுப் பிரிவு

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி

18வயதுப் பிரிவு

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி

(காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

16 வயதுப் பிரிவு

அராலி இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

18 வயதுப் பிரிவு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

(பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸகந்தவரோதயக் கல்லூரி மைதானம்) (3-86)

அரச ஊடகங்களுக்கு ரூ.இரண்டரைக் கோடி செலுத்தாமல் ஜனாதிபதியின் கட்சி மோசடி

குற்றச்சாட்டுக்களை அடுக்குகிறார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி.

கொழும்பு,ஒக்.25

'ஜனாதிபதியும், அவரது சகாக்களும் அரச ஊடகங்களுக்குச் செலுத்த வேண்டிய இரண்டரைக் கோடி ரூபாவைச் செலுத்தாமல் மோசடி செய்துள்ளனர். இத்தொகையை மீளப் பெறுவதற்கு இந்த நிறுவனங்களும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த மோசடிகளை எல்லாம் மூடி மறைத்துள்ளார்'

- இவ்வாறு குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறார் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார் அவர்.

தைரியம் இருந்தால் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி மறுக்கட்டும் பார்ப்போம் - என்றும் சவால் விடுத்தார் அவர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தில் அதன் தேர்தல் விளம்பர நோட்டீஸ்களை அச்சிட்ட வகையில் பல கோடி ரூபா லேக்ஹவுஸ் நிறுவனத்துக்குக் கொடுக்கப்படவேண்டியுள்ளது.

அடுத்து வந்த ஐ.தே.முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்தத் தொகையைச் செலுத்தக் கோரி லேக்ஹவுஸ் நிறுவனம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி செயலாளர் மீது வழக்குத் தாக்கல் செய்தது. ஆனால், எம்மிடம் (ஐ.தே.மு.) இருந்து ஊடக அமைச்சைப் பறித்ததன் மூலம் இந்த விவகாரத்தை அப்படியே மூடி மறைத்துவிட்டார்கள்.

இம்முறை நடைபெற்ற தேர்தலின் போதும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லக்ஹண்ட மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனம் என்பனவற்றின் மூலம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக இரண்டரைக் கோடி ரூபாவை ஜனாதிபதியின் கட்சி செலுத்தவேண்டியுள்ளது. ஆனால், ஜனாதிபதியோ தனக்கு வேண்டியவர்களை அரச ஊடகங்களின் தலைவர்களாக்கியதன் மூலம் இக்கொடுப்பனவுகளை மீண்டும் கேட்காமல் அவற்றின் வாயை அடைத்து விட்டார்.

இது யாருடைய பணம்? பொதுமக்களின் பணம். இப்படிப் பொதுமக்களின் பணத்தை சூறையாடும் ஜனாதிபதியும் அவரது சகாக்களும் அடுத்தவர்கள் மீது சேற்றைவாரி வீசுவது தான் வேடிக்கை.

தைரியம் இருந்தால் ஜனாதிபதி இவற்றை மறுக்கட்டும். - என்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி. சவால் விடுத்துள்ளார்.(ஐ-க)

வீரப்பனைச் சுட்டுக்கொன்ற விவகாரம்:

பொலீஸ் அதிரடிப்படைத் தலைமை அதிகாரியை இடைநிறுத்த தீவிரவாத இயக்கம் கோரிக்கை

மறுத்தால் தமிழகம் முழுவதும் குண்டுகள் வெடிக்கும் என மிரட்டல்

சேலம்,ஒக்.25

சந்தன மரக்கடத்தல் வீரப்பனைச் சுட்டுக் கொன்ற அதிரடிப்படையின் தலைமை அதிகாரியை இடைநிறுத்தம் செய்யவேண்டும். மறுத்தால் 35 நாள்களில் தமிழகம் முழுவதும் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடிக்கும் எனத் தமிழ் தீவிரவாத இயக்கம் ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது

வீரப்பனை உயிருடன் பிடிக்க முடியாததைக் கண்டித்து அவரது ஆதவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையே, தற்போது தமிழ் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 'விடுதலைப் படை' என்ற தமிழ்த் தீவிரவாதக் குழுவினர் வீரப்பனைச் சுட்டுக்கொன்ற அதிரடிப் படையின் தலைமை அதிகாரியை இடைநிறுத்தம் செய்யக்கோரி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி ரயில்வே நிலைய அதிபருக்கு கடந்த 21 ஆம் திகதி வந்த மர்மக் கடிதத்தில், "இன்னும் 35 நாள்களில் தர்மபுரி ரயில்வே நிலையத்தில் சக்திவாய்ந்த குண்டிவெடிக்கும். ரயில் தண்டவாளத்தில் ஆள் இல்லாத இடத்தில் குண்டுகள் வெடிக்கும். தர்மபுரி - ஈரோடு, தர்மபுரி - சென்னை இடையே குண்டுகள் வெடிக்கும். சந்தன மரக்கடத்தல் வீரப்பனை சுட்டுக்கொன்ற பொலீஸ் அதிகாரியை இடைநிறுத்தம் செய்.

சேத்துக்குடி கோவிந்தனை சுட்டுக்கொன்றாலும், ஆளில்லாத இடத்தில் குண்டுகள் வெடிக்கும். பொலீஸார் தீவிர பரிசோதனை செய்தாலும் ரயில் தண்டவாளங்களில் வெடிக்கும். மேலும், ஈரோடு நீதிமன்று, அரச அலுவலகம், ஆர்.டி.ஓ.நகராட்சி அலுவலகம் போன்ற இடங்களில் குண்டுகள் வெடிக்கும்.

மேலும், தர்மபுரி அரச அலுவலகங்கள், நீதிமன்றங்கள் எங்கள் குறியிலிருந்து தப்ப முடியாது. கோவை ரயில்வே நிலையமும் தப்ப முடியாது. திருச்சி, அரியலூர், கரூர், தண்டவாளம், விழுப்புரம் போன்ற ஏதாவது ஒரு ரயில் நிலையத்தில் குண்டு வெடிக்கும். நிலைய அதிபரின் தலை தப்பமுடியாது.

சேலம் ரயில் நிலையம் தப்பமுடியாது. இப்படிக்கு விடுதலைப்படை (கோபி) - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தைப் பார்த்த தர்மபுரி ரயில்வே நிலைய அதிபர் ராசையா அதிர்ச்சியடைந்தார். இது குறித்து சேலம் மற்றும் தர்மபுரி ரயில்வே பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தக் கடிதத்தை எழுதியது தமிழ்த் தீவிரவாத அமைப்பாக இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இதில்தொடர்புடைய தீவிரவாதிகளைப் பிடிக்கத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

இன்னும் 35 நாள்களில் வெடிகுண்டு வெடிக்கும் எனத் தமிழ்த் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளதால் உளவுத்துறை பொலீஸார், ரயில்வே பொலீஸார் கூட்டாகத் தீவிரக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் குறிப்பாக சேலம், தர்மபுரி, சென்னை ரயில்வே ஆகிய நிலையங்களிலும் தீவிர வெடிகுண்டுச் சோதனைகள் நடைபெறுகின்றன. (க-3)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிழக்காசியாவிற்கு நேற்று விஜயம்

லண்டன்,ஒக்.25

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் கிழக்காசியாவிற்கான நான்குநாள விஜயத்தை நேற்று ஆரம்பித்தார்.

இந்த விஜயத்தின்போது ஜப்பானிய பிரதமரையும், வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவிருக்கும் அவர், அமெரிக்க மாட்டிறைச்சி இறக்குமதியை ஜப்பான் ஓரளவிற்குத் தடைசெய்துள்ளமை குறித்துப் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

அமெரிக்க - ஜப்பானிய இராணுவக் கூட்டமைப்பு, வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டம் ஆகியன பற்றியும் இருதரப்பிலும் ஆராயப்படவுள்ளன.

(க-3)

ஜப்பானில் தொடர் நிலநடுக்கம்: 18 பேர் பலி; 1, 000 பேர் காயம்! 1,400 வீடுகள் முற்றாகச் சேதம்!!

டோக்கியோ,ஒக்.25

ஜப்பானின் வடக்குப் பகுதியில் 12 மணித்தியாலத்திற்குள் ஏற்பட்ட தொடர் நில நடுக்கங்களினால் குறைந்தது 18 பேர் உயிரிழந்துள்ளனர்; ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்; ஆயிரத்து 400 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

தலைநகர் டோக்கியோவின் 260 கிலோ மீற்றர் தூரத்தில் வடக்குப் பகுதியில் இருக்கும் நீகாடா மாநிலத்தின் மத்திய பகுதியிலேயே முதலாவது நிலநடுக்கம் ஏற்பட்டது. அது 6.8 ரிச்டர் புள்ளியாகப் பதிவாகியிருந்தது. இதனைத் தொடர்ந்து 16 நிமிடங்களுக்குப் பிறகு 5.9 ரிச்டர் புள்ளியாக அதிர்வுகளும் ஏற்பட்டன.

இந்த மாநிலத்தின் வீதிகளில் பெரும் பிளவுகள் ஏற்பட்டுக் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இந்த நில நடுக்கத்தின் காரணமாகப் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் ஆயிரக்கணக்கான, வீடுகள் புதைந்துள்ளன. மூன்று லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் தடைப்பட்டுள்ளது. கட்டடங்கள் தீப்பற்றியுள்ளன. நீர்க் குழாய்களிலும், எரிவாயுக் குழாய்களிலும் கசிவு ஏற்பட்டுள்ளன.

அத்தோடு 'புல்லட்ரயில்' என்றழைக்கப்படும் ஜப்பானின் அதிவேக ரயில்களில் ஒன்றும் இந்நிலநடுக்கம் காரணமாகத் தடம் புரண்டுள்ளது. இதில் பாதிக்கப்பட்டவர்களின் விவரம் அறிவிக்கப்படவில்லை.

இந்தத் தொடர் நிலநடுக்கங்களினால் ஜப்பானின் பல நகரங்கள் ஆட்டம் கண்டுள்ளன. ஜப்பானில் புதன்கிழமை வீசிய புயலால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஜப்பானில் இதுவரை இல்லாத அளவிற்கு 80 அடி உயரத்திற்கு அலைகள் எழுந்தன. இதனால் சுமார் 80 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் 1970இல் இருந்து ஏற்பட்டுவரும் இவ்வாறான கடல் கொந்தளிப்புகளின்போது அலைகள் எழும் உயரம் பதிவுசெய்யப்பட்டு வருகிறது. புதன்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் 80 அடி உயரத்திற்கு எழுந்த அலையே இதுவரை ஏற்பட்ட அலைகளில் உயரமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அலையின் உயரம் சுமார் எட்டு மாடிக் கட்டடத்தின் உயரத்திற்குச் சமமானதாம்.

ஜப்பானில் நேற்றும் நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற இந்த நிலநடுக்கத்தினால் இறந்தவர்களில் அநேகமானவர்கள் வயதானவர்களும், சிறுவர்களும், பெண்களுமே. பல்வேறு தரப்பிலானவர்களும் காயமடைந்துள்ளனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இரவுகளை காரிலேயே செலவிட்டுள்ளனர். இன்னும் அதிகமானவர்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு நடவடிக்கைகளில் படையினரும் பொலஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

ஜப்பானில் இவ்வருடம் மட்டுமே இவ்வாறான பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் தொடர்ந்து பல இழப்புக்களை அந்நாடு சந்தித்துள்ளது.

இதேவேளை -

தாய்வானின் வடகிழக்குப் பகுதியிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 4.2 ரிச்டர் அளவாக இது பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க-3)

ரஜனிகாந் நடிக்கும் சந்திரமுகி என்ற புதுப்படத்தின் ஆரம்ப விழா நேற்றுக்காலை சென்னை தியாகராஜ நகரில் உள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டில் நடைபெற்றது. இந்த ஆரம்ப விழாவில் நடிகர் கமலஹாசன் ரஜனிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

ஈராக்கில் கடத்தப்பட்ட மார்க்கரெட் தன்னைக் காப்பாற்றுமாறு உருக்கம்!

பக்தாத்,ஒக்.25

ஈராக் தலைநகர் பக்தாத்தில் வைத்துக் கிளர்ச்சியாளர்களால் பணயக் கைதியாகப் பிடித்துச்செல்லப்பட்ட "கேர் இன்டர் நஷனல்" எனும் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர்

மார்க்கிரெட் ஹஸன் தன்னைக் காப்பாற்றுமாறு பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயருக்கு வீடியோ நாடாமூலம் உருக்கமாக வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அந்த வீடியோ நாடாவில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஈராக்கில் நிலைகொண்டுள்ள பிரிட்டன் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் படைகளை அனுப்பாதீர்கள். இதுவே எனது கடைசிமணி நேரங்களாக இருக்கும். எனக்கு உதவுங்கள் - என்றுள்ளார்.

இந்த வீடியோநாடா வெள்ளிக்கிழமை தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது

மார்க்கிரெட் ஹஸன் தனது கத்துக்களை அழுதவண்ணமே தெரிவித்தார். இந்த வீடியோ நாடா இவர் கடத்தப்பட்ட மூன்று நாள்களுக்குப் பின்னர் அரபுத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.

பக்தாத்தில் உள்ள தமது அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது துப்பாக்கி முனையில் மார்க்கரெட் கடத்தப்பட்டார். (க-3)

இந்தோனேஷியாவில் ஆட்டுக்கறி சாப்பிட்ட 6பேர் ஆந்திரெக்ஸ் தாக்கி மரணம்

ஜகார்த்தா,ஒக்.25

இந்தோனேஷியாவில் ஆட்டுக்கறி சாப்பிட்ட ஆறுபேர் ஆந்திரெக்ஸ் தாக்கி உயிரிழந்துள்ளனர்; எட்டுப்பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தா அருகே சித்ரிங்குல் என்ற கிராமத்தில் வசிப்பவர்கள் கடந்தவாரம் ஆறு ஆடுகளை வெட்டினர். அவற்றின் கறியை உறவினர்களுக்கும் பகிர்ந்தனர். கறியைச் சாப்பிட்ட இவர்களை வாந்தி, வயிற்றுவலி, கடுமையான காய்ச்சல் ஆகியவை தாக்கின.

பாதிக்கப்பட்டவர்களில் ஆறுபேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இரத்தங்களைப் பரிசோதித்ததில் ஆந்திரெக்ஸ் என்ற கொடும் நோய் தாக்கி இருப்பது தெரியவந்தது. மேலும் எட்டுப் பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தோனேஷியாவில் ஆந்திரெக்ஸ் பாதிப்பு மீண்டும் ஆரம்பித்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. 2001இல் இந்நாட்டில் ஆந்திரெக்ஸ் தாக்கி நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-3)

ஐம்பது படையினரின் சடலங்கள் கிழக்கு ஈராக்கில் கண்டுபிடிப்பு!

எவ்வாறு கொலையுண்டனர் என்பது மர்மம்

பக்தாத்,ஒக்.25

ஈராக்கின் கிழக்குப் பகுதியில் கைவிடப்பட்ட வீதி ஒன்றில் காணப்பட்டன என்று கூறப்படும் 50 ஈராக்கியப் படையினரின் சடலங்களை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இவர்கள் ஈராக்கில் பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்பும் சமயத்தில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுடைய சடலங்கள் என்று சில செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரே சமயத்தில் இத்தனை எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டிருப்பது குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

மரண தண்டனைப் பாணியில் இவர்கள் அனைவரும் கூட்டாகக் கொல்லப்பட்டிருக்கின்றனர் என நம்பப்படுகிறது.

ஆயுதம் தரிக்காத துருப்பினரை ஏற்றிச் சென்ற இரண்டு வாகனங்கள் மீது கிரனேட் லோஞ்சர்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர் என்று ஈராக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

விசாரணையின் பின்னர் சடலங்கள் அனைத்தையும் புதைத்து விட உத்தரவிடப்பட்டிருக்கிறது.

(ஐ)

குடாநாட்டில் இன்று நடைபெறும் நிகழ்வுகள்

தென்மராட்சி,ஒக்.25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 10 ஆம், 11 ஆம் தர மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் தினப் பொது அறிவுப் போட்டிகளிலும் மற்றும் ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட பட்டிமன்றப் போட்டிகளிலும் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களிற்கான பரிசில்கள் இன்று திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் ஐக்கியநாடுகள் தினவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117-203)

★ ★ ★

தென்மராட்சி,ஒக்.25

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தினை இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளனர்.

இக்கூட்டத்தில் கலந்து அபிவிருத்தி வேலைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குமாறு அந்தந்தத் திணைக்களத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(எ-117)

★ ★ ★

நவாலி,ஒக்.25

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இன்று தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை நூலக வாரம் கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி, மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, தேடலும் பதிதலும், நூல்களை வெளியே சென்று சேகரித்தல் போன்ற போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

(எ-100-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுக்கான கட்டடம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியினை வைபவரீதியாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் திறந்து வைக்கவுள்ளார். (எ-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.25

பாடசாலைகளில் தகவல்தொழில்நுட்பக் கழகச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(எ-202)

★ ★ ★

கோண்டாவில்,ஒக்.25

கோண்டாவில் வடக்கு கலைவாணி சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, ஐக்கிய நாணய சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் வாணிவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல்4 மணியளவில் பாலர் பாடசாலையில் இடம்பெறும்.

இ.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ. பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

(எ-49)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். அரச அதிபர் செபத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-139-202)

பயிற்சியும், கலந்துரையாடலும்

மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பு மருந்து ஏற்றல் தொடர்பான ஒருநாள் பயிற்சியும் கலந்துரையாடலும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளன. யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளையும், மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

(3-135)

இறுதிப் பரீட்சை

புதிய பாடத்திட்டத்தின்கீழ் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி இறுதியாண்டு பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்தில் (கொக்குவில்) இடம்பெறவுள்ளது. (3-185)

இன்றுடன் 30 வருட நிறைவினைக் காணும்

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீடத்தினைச் சேர்ந்த
துணைவேந்தர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட
அனைவரையும் வாழ்த்துவதோடு
நாளை முதல் நடைபெறவுள்ள

மாபெரும் கண்காட்சியையும்

சிறப்புற வாழ்த்துகிறோம்.

அனுசரணையாளர்கள்

SAAMSTECH

தலைமை அலுவலகம்:
22-1/4, Galle Road,
Dehiwala.

841, Hospital Road,
Jaffna.

யாழ். மையங்கள்

★ விஸ்வகுல வீதி, பருத்தித்துறை. ★ கொடிகாமம் வீதி, நெல்லியடி.
★ மத்திய கல்லூரிக்கு எதிரில் அச்சுவேலி. ★ டச்றோட், சாவகச்சேரி
★ பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

விரைவில் சுன்னாகம், திருநெல்வேலி, வேலணை, கோப்பாய் மற்றும் மானிப்பாய் ஆகிய இடங்களில் எமது யாழ். மையங்கள் ஆரம்பமாகின்றன.

(37829)(34-44-44)

காப்பு ஒன்று தவறிவிட்டது

நேற்று (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை அரசடி வீதி, ஜனசக்தி சமூக நிலையத்துக்கும், நல்லூர் சிவன் வீதி, கல்வியங்காடு விநாயகர் வீதிக்கும் இடையில் பூட்டுக்காப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள விலாசத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இறையருள் கிட்டும். நா.சிறிகாந்தன், சி.பிரதீபா
162/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (37942)

மாடி வீடு தேவை

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகப் பாவனைக்கு மாடி வீடு ஒன்று தேவைப்படுகின்றது.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் குறைந்தது 5 அறைகளுடன் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு:
20, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 021- 222 2021, 222 5470
(அ-38832)

45 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 26 – 05 – 1976

உதிர்வு 11 – 09 – 2004

ஆறுமுகம் சந்திரமோகன்

(தோழர் அருள்தாஸ்)

(ச.பி.டி.பி.யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர், வடமராட்சி அமைப்பாளர், வடகடல் பணிப்பாளர் சபை உறுப்பினர், முன்னாள் தலைவர், பிரதேச சபை, பருத்தித்துறை)

அன்போடு பழகி பண்போடு வாழ்ந்த சந்திரமோகனே!

உன்னோடு வாழ்ந்த நாள்கள் உள்ளத்தில் நிறைந்து
உன்னையே நினைக்க. கண்ணீரும் வற்றிவிட்டதே!

எப்போதும் உன் முகம் கண்முன்னே தோன்றுதையா!
என்று இனி உன்னைக் காண்போம்? ஏங்கியே தவிக்கின்றது மனம்.
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (25.10.2004) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இதில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

- சகோதரர்கள்.

(37944)(34-44-14)

உதயன்

சபாநாயகரை மாற்ற முயற்சி!

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவை நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின் மூலம் பதவியிலிருந்து அகற்றுவதற்கான முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர்களே இதில் முனைப்பாக இருக்கின்றார்கள் என்று கூறப்பட்டாலும், அவர்களின் இந்த முயற்சிக்கு அரசுத் தலைமையின் ஆசீர்வாதமும் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

சபாநாயகர் நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்குத் தலைமை வகிப்பவர். இம்முறை சந்தர்ப்பவசத்தால் - மிக நெருக்கமான போட்டிக்கு மத்தியில் - அந்தப் பதவி எதிரணியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர் லொக்கு பண்டாரவிற்குப் போய்விட்டது.

எதிரணியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக இருப்பது நாடாளுமன்ற நடவடிக்கைகளின்போது அரசுத் தரப்புக்கு இடைஞ்சலாக இருந்தால் - அல்லது அவர் அச்செயற்பாடுகளின்போது நீதி, நியாயமாக நடந்துகொள்ளாவிட்டால் - அதற்காக அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது வேறு விடயம்.

இப்போது சபாநாயகரை அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிக்குக் காரணம் அது வல்ல.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ், அரச பொதுச் சேவைகள், பொலீஸ், நீதி, தேர்தல், ஊடகம் போன்றவற்றை நெறிப்படுத்தி வழிப்படுத்த சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

இந்த ஆணைக்குழுக்களுக்கு உரியவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கே உண்டு. அந்த அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவர் சபாநாயகர் தான்.

அதனால்தான், அந்தப் பதவியில் எதிரணியினர் ஒருவர் இருப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்று துள்ளிக் குதிக்கிறது அரசுத் தரப்பு.

ஏற்கனவே, அரசமைப்புக் கவுன்ஸிலினால் பொலீஸ் ஆணைக்குழுவும் பொதுச்சேவை ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டு, அவை இயங்கத் தொடங்கவிட்டன.

முன்னைய ஐ.தே.மு. அரசின் காலத்தில் நியமிக்கப்பட்ட இந்த இரு ஆணைக்குழுக்களிலும் ஐ.தே.கட்சி ஆதரவுப் போக்குடையோரே அதிகம் இடம்பெற்றிருப்பதால் இத்துறைகளில் தாம் நினைத்ததைச் செய்யமுடியாதிருப்பதாகப் பொருமுகின்றன ஆளும்கட்சி வட்டாரங்கள்.

எனவே, சபாநாயகரை மாற்றி, அரசமைப்புக் கவுன்ஸிலைத் தங்களுக்குக் கீழ்ப்படிவானதாக உருவாக்கினால், அதன்கீழ் இயங்கும் ஆணைக்குழுக்களையும் தமது 'வழிக்குக்' கொண்டுவரலாம் என்று திட்டமிடுகின்றன இவ்வட்டாரங்கள்.

மேற்படி அரசமைப்புக் கவுன்ஸிலினால் நியமிக்கப்படவேண்டிய சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இன்னும் செயற்படத் தொடங்கவில்லை. இந்த ஆணைக்குழுவில் இடம்பெறவேண்டியவர்களின் பெயர்களை அரசமைப்புக் கவுன்ஸிலில் சிபாரிசு செய்துவிட்டது. ஆனால், அந்த ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்குத் தாம் நியமிக்கவேண்டிய பிரதிநிதியை நியமிக்காமல், ஜனாதிபதி இழுத்தடித்து வருகிறார். இதனால், அந்த ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அமைக்கப்படுவது தாமதமாகிவருகிறது.

17 ஆவது அரசமைப்புத் திருத்தப்படி, தேர்தல் ஆணையாளரை இந்தத் தேர்தல் ஆணைக்குழுவே நியமிக்கவேண்டும்; நியமிக்கமுடியும்.

ஆனால், அந்த ஆணைக்குழுவே இன்னும் அமைக்கப்படாததால் தற்போதைய தேர்தல் ஆணையாளரின் பதவிக் காலம் - அவர் ஓய்வுபெறும் வயதைக் கடந்ததால் முடிவு பெற்றும், இன்னும் புதிய ஒரு தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்படவில்லை. இதனால் பதவிக்காலம் முடிந்த பின்னும் - தமது பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க முடியாத நிலையில் - அப்பதவியில் தற்போதைய தேர்தல் ஆணையாளர் தொடர்கின்றார்.

ஓய்வுபெறும் வயதைக் கடந்துவிட்டதால் தம்மைப் பதவியிலிருந்து விடுவிக்கும்படி உயர்நீதிமன்றத்திடம் அவர் முறையிட்டும் பயனில்லை. ஜனாதிபதி தாமாகக் கண்திறந்து சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தனது பிரதிநிதியை நியமித்து, அந்த ஆணைக்குழுவை இயங்கவிட்டால் மட்டுமே தற்போதைய தேர்தல் ஆணையாளருக்கு அவரது பதவியிலிருந்து விடுவிப்பும் ஓய்வும் கிட்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற ஒரு சட்டச் சிக்கல் இப்போது உள்ளது. 2005 டிசெம்பரிலா? அல்லது 2006 டிசெம்பரிலா? என்பதே கேள்வி. அது 2006 டிசெம்பரில் தான் என்று ஜனாதிபதி தரப்பும் கருதுகிறது.

ஆனால், தேர்தல் ஆணையாளர் பதவியில் இருப்பவர் அது 2005 டிசெம்பரில் நடத்தப்படவேண்டும் எனத் தீர்மானித்து, அதன்படி அறிவிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

எனவே, தற்போதைய தேர்தல் ஆணையாளரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தமக்குச் சாதகமான ஒருவரை அப்பதவிக்கு அமர்த்துவதன் மூலம் 2006 டிசெம்பர்வரை தமது பதவியில் நீடிக்க ஜனாதிபதி முயல்வார் எனக் கருதப்படுகிறது.

அப்படித் தமக்குச் சாதகமாகச் செயற்படக்கூடிய ஒருவரைத் தேர்தல் ஆணையாளர் பதவியில் ஜனாதிபதி குமாரதுங்க அமர்த்த விரும்பினால், அதற்குத் தேர்தல் ஆணைக்குழுவை அவர் முதலில் இயங்கச்செய்யவேண்டும். அந்தத் தேர்தல் ஆணைக்குழுவில் இருப்போர் அவருக்குச் சாதகமான முடிவை எடுப்பவர்களாகவும் இருக்கவேண்டும்.

அரசமைப்புக் கவுன்ஸில் மூலம் நியமிக்கப்படும் தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதிக்குச் சாதகமானவர்களைக் கொண்டிருக்கவேண்டுமானால், முதலில் அரசமைப்புக் கவுனஸில் அவரது விருப்பப்படி செயற்படுவதாக இருக்கவேண்டும்.

எதிரணியைச் சார்ந்த ஒருவர் சபாநாயகராகவும் அதன் மூலம் அரசமைப்புக் கவுன்ஸில் தலைவராகவும் இருக்கும் வரை அது சாத்தியப்படாது. சபாநாயகரை மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதன் முக்கிய பின்னணிக் காரணம் இதுதான்.

குடாநாட்டின் முன்னரங்க நிலைகளை அமெரிக்கப் படை அதிகாரி பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்,25

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் கான் ஏக்சின் வெறி பலாலி, முகமாலை, நாகர்கோயில் ஆகிய முகாம்களின் முன்னரங்க நிலைகளின் பாதுகாப்பு நிலைமையை ஆராய்ந்தார்.

அமெரிக்க - பசுபிக் பிரிவின் வியூகத் திட்டமிடல் மற்றும் கொள்ளைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கான் ஏக்சின் வெறி தலைமையில் வருகைதந்த உயர்மட்டக் குழுவில் பாதுகாப்பு மற்றும் இராணுவத் தளபதி லெப்.கேணல் றிச்சேர்ட் கிறிவன், மேஜர் வைட் பற்றிச்,* கப்டன் மெனோமெஞ் ஆகியோர் இடம்பெற்றனர்.

பலாலி விமானத்தளத்தில் யாழ். கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை இந்தக் குழுவினர் சந்தித்தனர்.

முதலில் படையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அதன்பின் யாழ். மாவட்டப் பாதுகாப்பு நிலைமை, வரலாறு ஆகியன தொடர்பாகத் தென்னக்கோன் எடுத்துக்கூறினார்.

இந்த விஜயத்தை நினைவு கூர்ந்து இரு தளபதிகளும் நினைவுக் கேடயங்களைப் பரிமாறிக் கொண்டனர். அத்துடன், ஞாபகார்த்தமாக மாங்கன்று ஒன்று நடப்பட்டது.

அதைத் தொடர்ந்து முகமாலைக்கு ஹெலி மூலம் சென்ற தளபதி, ஹெலியில் இருந்தவாறு குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைகளைப் பார்வையிட்டார்.

முகமாலைப் பாதுகாப்பு நிலைகள் குறித்து ஆராய்ந்த அவர் அதன்பின் நாகர்கோயில் முகாமுக்குச் சென்று அங்கு பாதுகாப்பு நிலைகளைப் பார்வையிட்டார். அதன்பின் படையினருடன் சேர்ந்து மதியவிருந்து உண்டார். (எ-3)

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பிரமாணக்குறிப்புகள் வெளியாகின

எழுதுவினைஞர் சேவையிலிருந்து சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை எனப் பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பதவிக்கான பிரமாணக் குறிப்புகள் அரச அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய சேவைப் பிரமாணக் குறிப்பில் சம்பளத்திட்டம், ஆள்சேர்ப்பு முதலியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இது ஒரு போட்டிப் பரீட்சைக் குரியதாகும்.

இப்பதவிக்கான புதிய நியமனத்திற்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ் அல்லது சிங்களம், கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தி அல்லது பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களே விண்ணப்பிக்கமுடியும்

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை விசேட தர உத்தியோகத்தர்கள், சுகாதார அமைச்சில், சுதேச வைத்திய அமைச்சில், சுகாதாரத் திணைக்களத்தில், பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள் விசேட இயக்கங்களில் ஆயுள்வேத வைத்தியத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பதவி உயர்வு பெறமுடியும்.

போதனா வைத்திசாலைகள், தேசிய வைத்தியசாலைகள் மற்றும் இவற்றிற்குச் சமமான வைத்தியசாலைகளில் வைத்தியசாலைச் செயலாளராகவும் பதவி உயர்வு பெற்றுக்கொள்ளமுடியும்.

இப்பிரமாணங்கள் 01.05.2003 இல் இருந்து நடைமுறைக்கு வருகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-15)

தமிழ் – சிங்கள உறவை மீளக்கட்டியெழுப்ப யுத்தநிறுத்த காலத்தைப் பயன்படுத்துவோம்

இலங்கைக் கலைக்கழகத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

கடந்தகாலக் கசப்பான நிகழ்வுகளினால் பிளவுபட்டுப் போயுள்ள சிங்கள - தமிழ் உறவை மீளக்கட்டி எழுப்ப யுத்தமற்ற காலப்பகுதியைப் பயன்படுத்த வேண்டும்.

- இப்படிக் கூறினர் இலங்கைக் கலைக்கழகத் தலைவர் சாள்ஸ் தயானந்த.

யாழ் பொதுநூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக இலங்கைக் கலைக்கழகம் நேற்றுமுன்தினம் வழங்கியது. அந்த நிகழ்வில் பேசுகையிலேயே இப்படி அவர் கூறினார்.

மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் நடந்த கசப்பான நிகழ்வுகளினால் சிங்கள - தமிழ் சமூகங்கள் பிளவுபட்டு நிற்கின்றன. இந்த

நிலைமாறவேண்டும். யுத்தமற்ற இந்தக் கால இடைவெளியைப் பயன்படுத்தி இரு இனங்களும் நல்லுறவுடன் வாழும் நிலை உருவாகவேண்டும்.

இரு இனங்களுக்கும் இடையில் பரஸ்பர நட்புறவு ஏற்படவேண்டும். இதற்கான சிந்தனைகளை இளம் சந்ததிக்கு ஊட்ட வேண்டியது இரு இனங்களின் தலைவர்களின் கடமையாகும்.

இந்தவகையில் சிங்கள - தமிழ் கலைஞர்களை ஒன்றிணைத்து மாநாடு ஒன்றை நடத்தக் கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. தெற்கில் இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றேன். யாழ். மாவட்டத்தில் கலாநிதி குணராசா செய்வார் என நான் நம்புகின்றேன் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் மலையகக் கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் அந்தனி ஜீவா, மாநகர ஆணையாளர் க.குணராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(எ-3-6)

அக்திகள் புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில்

30ஆயிரம் மாணவர்களுக்கு மிதிவெடி அபாயக் கல்வி

யாழ்ப்பாணம்,ஒக்.25

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டுவரும் மிதிவெடி விழிப்புணர்வுத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 120 பாடசாலைகளைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மிதிவெடி அபாயக் கல்வி வழங்கப்பட்டுள்ளது.

மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் யாழ். குடாநாட்டில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.

'தீனக் குழந்தை' என்ற பெயரில் நாற்பது நிமிட நேர குறுநாடகம் மூலம் மிதிவெடிகளால ஏற்படக்கூடிய அபாயங்கள், பாதிப்புக்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கிவருவதாக இத்திட்டத்தின் பிரதான இணைப்பாளர் தேதேவாணந் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் 'சர்வோதயம்', வெண்டூரா' ஆகிய நிறுவனங்களும் புனர்வாழ்வு நிறுவனம் போன்ற அமைப்புகளும் மிதிவெடி விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. (4-5)

அடையாள அட்டைகள் விநியோகத்திற்கு

மாவட்டங்கள் தோறும் முன்னரங்குச் செயலகம்

தேசிய அடையாள அட்டை விநியோகத்தைத் துரிதப்படுத்தும் வகையில் மாவட்டங்கள் தோறும் விசேட முன்னரங்குச் செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

முன்பு கொழும்பு மருதானையில் இயங்கிவந்த முன்னரங்கு அலுவலகம் இப்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது. அது தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான மத்திய முன்னரங்குச் செயலகமாக இயங்கவுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப்பத்திரம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சகல தேர்தல் வாக்களிப்புக்களின் போதும் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன எனத் தேர்தல் ஆணைக்குழு அரச வர்த்தமானி மூலம் உறுதிப்படுத்திய பின்னரே இச்சட்டம் நடைமுறைக்கு வரும்.

எனவே, தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்படி சகல நிர்வாக மாவட்டங்களிலும் தனித்தனியான முன்னரங்குச் செயலகங்கள் உருவாக்கப்படும். அந்தந்த மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கான அடையாள அட்டைகள் அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்கப்படும்.

இதற்கான மனித வளம், தொழில் நுட்ப உபகரணங்கள் மற்றும் தேவையான நிதி என்பவற்றைப் பெறுவதற்காகவே அது தொடர்பான திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் சகல மாவட்டங்களிலும் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விசேட முன்னரங்கு அலுவலகங்கள அமைக்கப்படும்.

இதன்மூலம் ஒரு வருடகாலத்திற்குள் சகலருக்கும் தேசிய அடையாள அட்டைகளை விநியோகித்து முடிக்கமுடியும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.(க-3)

நாளை

செவ்வாய்க்கிழமை
(26.10.2004)
திதி: திரயோதசி
முற்பகல் 9.13 வரை
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பிற்பகல் 12.30 வரை
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

சேவை, தியாகம், பணிவு வாழ்வுக்கு வெற்றி தருவன.

நெஞ்சைவிட்டகலாத

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

விஜயரத்தினம் றஞ்சித்குமாரசிறீ

(றஞ்சித்)



அன்னை மடியில்	ஆண்டவன் அடியில்
04.10.1961	25.09.2004

கடல் கடந்து கடமைசெய்த கண்ணியம் மிக்கவனே!
எம் குடும்பத்தின் சுமைதாங்கி ஏற்றமுறச் செய்தவனே!
நாம் பெற்றபட்டமெல்லாம் உன் வியர்வைத் துளிகளன்றோ!
உன் இல்லறத்தைக் கட்டியெழுப்பக் கனவுகள் கண்டாயே
கனவை நனவாக்கக் காலன் கொடுமை செய்தான்
உன் அன்னை மரணித்து ஆண்டு ஒன்றுதானே ஐயா!
அவர் அன்பின் அணைப்பாலே அகல அகன்றாயோ?
உன் கூடப்பிறந்தவர்கள் குடியாய்த் குடிக்கின்றோம்
ரஞ்சித்தே மீண்டும் வந்திதமக்கு விரும்பியன செய்வாயோ?
உன் ஆன்மா ஆண்டவனின் பாதமதில் அமைதியடையட்டும்.

சாந்தியடையச் சங்கரனை நாம் தொழுவோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"சண்முகனின் வாசம்",
நீலிப்பந்தனை,
காரைநகர்.

(37923) (24-14-44)

உம்மை என்றும் நினைந்து வாழும்:
அப்பா, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

சின்னத்தங்கநாச்சன் கிருஷ்ணகோபால்

மண்ணில்	விண்ணில்
27-05-1935	25-09-2004

கரணவாய் மத்தி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கநாச்சன் அவர்கள் 25.09.2004 சனிக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா கணபதிப்பிள்ளை - செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம் கிருஷ்ணகோபால் (பொலீஸ் அதிகாரி) அன்பு மனைவியும் தங்கரத்தினம், இரட்ணராஜா (U.K.) புவனேந்திரராஜா (கனடா), இராஜரத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சங்கீதா, தீபன், (கனடா) அனுஜன், அஜீவன் (U.K.) கிருஷாந்தன், அஞ்சலி, அஞ்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற ரவீந்திரநாதன், சிறிமோகன், றஞ்சனா, சிவனேஸ்வரி, சிலேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், வள்ளிநாச்சன், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமச்சந்திரன், பரமேஸ்வரி, சோதிமலர் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

எங்கள் அன்னையாரின் மரணச்செய்தி கேட்டவுடன் வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும், நோயுற்று வைத்தியசாலையில் இருந்தபோது பெரிதும் உதவிய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுற்றத்தாருக்கும் மரணச்சடங்கில் கலந்து ஆறுதல், தேறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும் தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் கூறியோர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (25-10-2004) திங்கள்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதன்பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✪ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உடச்சியா வளவு,
கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.

(37771)(39-14-44-24)

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், சகோதரங்கள், மருமகன், மருமகள், மைத்துனன், மைத்துனி.

A professional career that deals with....



Association of Chartered Certified Accountants

ACCA

Presentation & Seminar
Conducted By
Mrs. Ajitha Perera, Manager, ACCA Sri Lanka

Students & Parents are cordially invited

at Public Library Auditorium, Jaffna
28th October - 2004, Thursday
Seminar I : 10.00am to 11.30am
Seminar II: 3.00pm to 4.30pm

See your self in.....



"ACCA is the only professional accounting body to offer you a BSc. (Hons) Degree in Applied Accounting while taking their ACCA Examinations."

Course start: Mid November 04
Conducted by Professional
Panel of Lecturers
100% Coaching for examination

UNIVENTURES
Institute of Business Management

Contact student advisor for more information
55 Martin Road, Jaffna. Tel: 0777 918280

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாண சபை
போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் புனரமைக்கும் திட்டம் (காப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 2043 - SRI(SF)

கேள்வி கோரல் - இல. 02

குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் புனரமைக்கும் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்டக் கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்த இனங்காட்டல் இல.	ஒப்பந்தத்தின் பெயர்	ஆகக் குறைந்த இக்ராட் பதிவு	கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா)
01.	MU/CAARP/ED/15	முல்/தண்ணீரூற்று அ.த.க. பாடசாலையில் 110'x25' இரண்டு மாடிக் கட்டடத்தை மீள்நிர்மாணித்தல்.	M6	57,000/-
02.	MU/CAARP/ED/16	முல்/விசுவமடு மகா வித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக் கட்டடத்தை மீள்நிர்மாணித்தல்.	M6	57,000/-
03.	MU/CAARP/ED/18	முல்/முல்லைத்தீவு இந்து தமிழ் கலவன் வகுப்பறைக் கட்டடங்களை நீர், சுகாதார வசதிகளுடன் மீளக் கட்டுதலும் திருத்தம் செய்தலும்.	M7	38,000/-
04.	MU/CAARP/ED/19	முல்/மல்லாவி மத்திய கல்லூரி வகுப்பறைக் கட்டடங்கள் நீர், சுகாதார வசதிகளுடன் திருத்தம் செய்தல்.	M7	40,000/-

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD உடன் மேற்படி M7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள 01.07.2003இற்குப் பின் இக்ராட் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிலைவரமொன்று வழங்கப்படவேண்டும்.
   IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலான மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ முடித்திருந்தால் ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு CAARP திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்டப் பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒப்பந்த ஆவணங்களை 2004 நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 2004 நவம்பர் மாதம் 10ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/- செலுத்திக் கொள்வனவு செய்யப்படலாம்.
7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2004 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.
8. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.
9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, CAARP, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2004 நவம்பர் மாதம் 22ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்குக் கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

வி.விசுவலிங்கம்,
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை, பதில் அரச அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-38467) (24-14-44)

உங்கள் இடுப்பின் அளவு மிக அதிகமானதா? ஆபத்து! குறைத்துக்கொள்ள முயலுங்கள்!!

இடுப்பைச் சுற்றி கொழுப்பு கெட்டியாக இருக்குமானால் அது ஆபத்துக்கறிகுறியாகும். அந்தக் கொழுப்பை எவ்வளவு விரைவாகக் குறைத்துக்கொள்கிறீர்களோ அவ்வளவுக்கும் உங்களுக்கு நல்லது. இப்படிக் கூறுபவர் சாதாரண ஆள் அல்ல. இடுப்புப்பகுதியில் உருவாகும கொழுப்புத் தன்மை பற்றிவிரிவாக ஆராய்ந்துள்ள ஒரு பேராசிரியர்.

உடல் பாராமாய் இருப்பதனால் பாதகமில்லை, ஆனால் அந்தப் பாரம் உடலின் எந்த பகுதியில் இருக்கிறது என்பதே முக்கியம் என்கிறார் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழக பேராசிரியரான அந்தனி பேனார்ட் என்பவர். நீரிழிவு நோய்க்கும் உடல் பருமனுக்குமுள்ள நெருக்கம் தொடர்பான ஆய்வாளர் இவர்.

வயிற்றைச் சுற்றி கொழுப்பிருப்பதும் அல்லது ஆப்பிள் போன்றதோர் உருவில் கொழுப்பு படிந்திருப்பதும் ஆபத்தானது; ஆனால், அதே அளவு பாரம் தொடைகளில் காணப்படுவது அவ்வளவு ஆபத்தானதல்ல. இதற்கு முக்கிய காரணம், வயிற்றைச் சுற்றிக் காணப்படும் கொழுப்புக் கலங்களுக்கும் வேறு இடங்களில் காணப்படும் கொழுப்புக் கலங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதே என்கிறார் அவர். இவைகளிலிருந்து வெளியேற்றப்படும் அமிலங்கள் இன்சுலின் சுரப்பியைப் பாதிக்கலாம், நீரிழிவு மற்றும் இருதய நோய்களையும் ஏற்படுத்தலாம் என்கிறார்.

உடல் பளுவைப்பார்த்து நோய் அறிகுறிகளைக் காண முயல்வதை விடுத்து இடுப்புச் சுற்றளவைப்பார்த்துக்கொள்வதன் மூலம் இரண்டு வகையான நீரிழிவு நோய்களையும், இருதய நோய்களையும் மிகத் தெளிவாகக் கண்டுபிடிக்கலாம் என்பது பேராசிரியர் பேனார்ட்டின் கருத்தாகும்.

40 அங்குலத்திற்கு மேல் இடுப்பளவு கொண்ட ஆண்களும் 35 அங்குலத்துக்கு மேல் இடுப்பளவு கொண்ட பெண்களும் நீரிழிவுக்கும் இருதய நோய்க்கும் ஆகக்கூடிய ஆபத்தை எதிர்நோக்குகிறர்கள். இடுப்பின் சுற்றளவு தடிப்பாய் இருப்பவர்கள் இந்த ஆபத்துக்குரியவர்கள் என்று கருதவேண்டும். கீழ் இடுப்பின் சுற்றளவு ஆண்களில் 37 அங்குலமும் பெண்களில் 32 அங்குலமும் உள்ளவர்களும் இந்தவித ஆபத்துக்குள்ளாகக்கூடியவர்கள்தான்.

உடல் பாரம் அதிகரிப்பதென்பது தற்காலத்தில் மிகுதியும் அதிகரித்துவரும் நிலைமையைப் பார்த்தால் இன்னும் பத்து ஆண்டுகளில் மக்கள் தொகையில் 10 வீதமானவர்கள் இந்த வித ஆபத்தை எதிர்நோக்குவார்கள் போல் தெரிகின்றது என்று கூறுகிறார் பேராசிரியர் பேனாட்.

அடிவயிற்றில் அளவுக்கு அதிகமாகப் பாரம் அழுத்துவதனால் இன்சுலின் சுரப்பி தடைப்பட்டு இன்சுலின் சுரப்பது பாதிக்கப்படலாம். இதனால் நீரிழிவு பிரச்சினை ஏற்படலாம். பாரம் அதிகரிக்கும்போது கணயத்தில் இன்சுலின் தயாரிப்பு நிறுத்தப்படுகின்றது.

ஒருவர் எவ்வளவு அதிகக் கொழுப்புடனும் இடுப்பளவை எவ்வளவு பெரிதாகவும் கொண்டிருக்கிறரோ அந்த அளவுக்கு இன்சுலின் உற்பத்தி பிரச்சினைக்கு அவர் உள்ளாகலாம். கால ஓட்டத்தில் கணயம் வலுவிழந்து போகின்றது. அந்த நிலையில், ஒன்றில் இன்சுலின் உற்பத்தியைக் குறைத்துவிடுகின்றது. அல்லது முற்றாகவே நிறுத்திவிடுகின்றது.

இடுப்பைச்சுற்றி, கொழுப்பின் திரட்சிய[illegible] வெறுமனே 'சும்மா' இருப்பதாகக் கருத[illegible] இந்தக் கொழுப்பானது செயல்பட்டுக்[illegible] இருக்கிறது. புரதங்களையும், ஹோர்மோ[illegible]களை[illegible]யும் உற்பத்தி செய்துகொண்டும் வெ[illegible]யேற்றிக் கொண்டும் இருக்கின்றது. இவை சிறிய அளவில் உடலுக்கு தேவைப்பட்டாலும் அதிக உற்பத்தியாவது இன்சுலினைப் பாதிப்பது மட்டுமல்ல, இரத்த அழுத்தத்தை அதிகரிக்கசெய்து இரத்தக் குழாய்களில் கொலஸ்ட்ரோலின் அளவையும் அதிகரித்து விடுகின்றது என்கிறார் டாக்டர் பேனாட்.

இந்த நிலைமையிலிருந்து ஒருவர் எவ்வாறு தப்பிக்கொள்ளலாம்? அதிக உடல் பாரத்துடனிருப்பவர்கள் அதனைச் சாதாரண அளவு பாரத்[illegible]த ஏற்படுத்திக்கொள்ளும் வகையில் கொழுப்பைக் குறைத்துக்கொள்ள முயல்வது. இதுதான் பேராசிரியர் பேனார்ட் கூறும் மாற்று வழி. (ப)

சிறுகுறிஞ்சாவை உணவு வகைகளில் ஒன்றாக்குங்கள் இன்சுலின் சுரப்பை அது அதிகப்படுத்தும்

உலகில எத்தனையோ செல்வங்கள் உள்ளன. ஆனால், நம்முன்னோர்கள் நோயற்ற வாழவைத்தான் குறைவற்ற செல்வம் என்று சொன்னார்கள். அந்தக் குறைவற்ற செல்வத்திற்கு நிறைவான வழிதனை வகுப்பது சித்த மருத்துவ முறையே. அது உணவே மருந்தாகும் என்ற உண்மைக்கு உரைகல்லாக விளங்குகிறது.

உலகில் இதுவரை தீராதென கைவிடப்பட்ட நோய்க்கு வாழ்நாள் முழுவதும் மருந்து, மாத்திரை சாப்பிட்டாலும் குணமாகாத நீரிழிவு எனும் சர்க்கரை வியாதிக்கு 2 விதமாகச் சிகிச்சையளிக்கப்படுகிறது. அவற்றுள்,

* உடலில் உற்பத்தியாகும் இன்சுலின் துணைகொண்டு உணவுத் திட்டத்தை வகுத்துக்கொள்ளல் அல்லது மருந்துகளை கொடுத்து உணவு முறையை கட்டுப்படுத்துதல்.
* முற்றிலும் இன்சுலின் சுரப்பை இழந்துவிட்டவர்களுக்கு செயற்கை இன்சுலினை ஊசியின் மூலமாக உடம்பில் ஏற்றிக்கொள்வதன் மூலமாக சிகிச்சையளித்தல்.

இப்படியாக சர்க்கரை நோயாளர்கள் தங்களுடைய நோயை முழுமையாகக் குணமாக்கிக் கொள்ளமுடியாமல், மேற்கொண்ட முறைகளை பின்பற்றி ஓரளவிற்கு மட்டுமே கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். சர்க்கரை நோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களும் கூடச் சரியான உணவு பற்றிய விழிப்புணர்வை நோயாளர்களுக்கு ஏற்படுத்தாமல் உணவின் அளவை மிகவும் குறைத்து, பரிசோதனையின் போது சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறி, நோயாளிக்குத் திருப்தியை ஏற்படுத்துவதிலேயே மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். இப்படியாகத் தற்போது சர்க்கரை நோயாளர்கள் தாங்கள் எத்தகைய உணவினை தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும் என்ற அடிப்படை அறிவினை பெறாமல் இருந்து விடுகின்றனர். இத்தகையவர்களுக்கு ஒரு சரியான வழியை காட்ட வேண்டியது எங்களது அவசியமான கடமையாகும்.

பின்பற்ற வேண்டிய உணவு முறைகள்

காலையில் விழித்தெழுந்தவுடன் இயற்கை கடன் கழித்ததும், இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட மூலிகைப் பொடியை அல்லது மூலிகைகளைக் கொண்ட பற்பசையை உபயோகித்து பல் தேய்த்து, வெறும் வயிற்றில் இயன்ற அளவு தண்ணீர் அருந்துதல்.

* காலை உணவாக கருந்துளசி, வில்வம் அல்லது அருகம்புல், வேப்பிலை இரண்டும் சம அளவு அல்லது நெல்லிக்காய் வற்றலுடன் மஞ்சல் தூள் இவற்றுள் ஏதாவது ஒன்றை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். பின்பு எமது சாதாரண உணவுகளை உண்ணலாம்.
* நான்குமணி நேரத்துள் பசித்தால் மட்டுமே எலுமிச்சைச்சாறு, நீரோர் அல்லது ஒரேஞ்சுப பழம் அல்லது இரண்டு வெள்ளரிப்பிஞ்சு இவற்றுள் ஏதாவது ஒன்றைச் சாப்பிடலாம்.
* மதிய உணவாகத் தக்காளி, வெள்ளரிப் பிஞ்சு, வெண்டைக்காய், முட்டைக்கோசு, முள்ளங்கி, கரட், வெங்காயம், புடலங்காய், கொத்தமல்லி இலை, மிளகு, சீரகம் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுடன், 50 கிராம் இற்கு குறையாமல் கோதுமை மா, கொண்டல்க் கடலை, பாசிப் பயறு இவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். எள்ளு, வெந்தயம் இவை சம அளவு கலந்து ஊற வைத்துச் சாப்பிடலாம்.
* மாலை நேரத்தில் வேகவைத்த காய்கறி சூப் அல்லது பாகற்காய் சூப் அல்லது முருங்கை கீரை சூப் சாப்பிடலாம். இதைத்தவிர கொண்டக் கடலை, இடித்த எள்ளு இவை போன்ற தானிய வகைகள் ஏதாவது ஒன்றைச் சாப்பிட்டு வரலாம். இதனால் உடலுக்குத் தேவையான புரதச் சத்தும் கிடைக்கிறது. உடல் அசதியும் நீங்குகிறது.
* இரவு உணவாக நிறைய காய்கறிகளுடன எண்ணெய் இடாமல் தயாரித்த உணவுகளை உண்ணலாம். பழங்களில் துவர்ப்பு, புளிப்பு சுவை கொண்ட பழங்களாகப் பார்த்து ஏதாவது ஒரு பழம் மட்டும் சாப்பிடலாம்.

வாழைப்பூ, அத்திப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, வெந்தயக்குழமபு இவை போன்ற உணவு வகைகளைச் சாப்பிட்டு வரலாம். அரிசி உணவை தினசரி வழக்கப்படுத்தாமல் வாரத்தில் ஓரிரு நாள்கள் மட்டுமே அரிசி உணவை சாப்பிடலாம். இவர்கள் பசி, களைப்பு, தாகம் ஏற்படும் போதெல்லாம், நீரோர், வெள்ளரிப்பிஞ்சு, காய்கறிசூப், ஒரேஞ்யூஸ் போட்டு சாப்பிடலாம்.

இயற்கை மருந்துகள் அதாவது மூலிகைகளை உண்ணும் உணவுடன் கலந்து உண்ணும் போது அவை இரத்தத்தின் இயற்கைத் தன்மையை மீட்டு கல்லீரல் (Liver) மற்றும் கனையத்தின் (Pancreas) செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்றன.

தெய்வீக மூலிகைகளுள் ஒன்றாக கருதப்படும் சிறுகுறிஞ்சா நீரிழிவு நோயாளர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமாக அமைகிறது. சிறிகுறிஞ்சாவானது நீடித்து வாழும் தாவரமாகும். வேறு உயரமான மரங்களின் மேல் படரும் ஒருவகை கொடியாகும். இக்கொடியின் தண்டுகள் கம்பிகளைப்போன்று உறுதியானவை. இலைகள் சிறியவை, தனித்தவை, எதிரிடையானவை. நீள்வட்டமானது. தண்டில் சிறிய மயிர்கள் காணப்படும். இலையை ஒடிக்கும்போது பச்சைகலந்த மஞ்சல் நிறமான பால் வரும். இதன் இலையை வாயிலிட்டு மென்று சுவைத்தால், கடுமையான கசப்புச் சுவை நாவை விட்டு நீங்காது. அப்போது சீனியின் வாய்நிறையப் போட்டுமென்றாலும் சீனியின் இனிப்பு சுவை தெரியாது. மண்ணை சுவைப்பது போல இருக்கும். இக் கசப்புச்சுவை சீனியின் இனிப்பு சுவையையே முழுமையாக மாற்றி எச்சிலையும் கூட கசப்பாக மாற்றிவிடுவதால் இப்பச்சிலையை 'சர்க்கரை கொல்லி' என்று கூறுவது பொருத்தமே.

குறிஞ்சாவில் இரண்டு வகை உள்ளது. அதில் ஒன்று சிறுகுறிஞ்சா மற்றையது பெருங் குறிஞ்சா.

நி.தர்ஷனோதயன்
3ஆம் வருடம் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

பெருங்குறிஞ்சாவின் இலைகள் தடிப்பு குறைந்தவை. இளம்பச்சை நிறமானது. இதன் இலையை வாயிலிட்டுச் சுவைத்தால் சிறிதளவு கசப்புச் சுவையே இருக்கும். இலையை ஒடிக்கும் போதும் பால் வராது. இதன் மருத்துவப்பயன் சிறுகுறிஞ்சாவுடன் ஒப்பிடும் போது குறைவானது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை பெருங் குறிஞ்சாவே அதிகளவில் காணப்படுகிறது. பெரும்பாலான மக்கள் பெருங்குறிஞ்சாவையே மருத்துவப்பயன் அதிகளவுடைய சிறுகுறிஞ்சா என நினைத்து பயன்படுத்துகின்றனர். இது மக்களின் அறியாமையே எடுத்துக் காட்டுகிறது. இக்

(16ஆம் பக்கம் பார்க்க)

காலத்தின் தேவை கருதி

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி - ஒக். 26-30

தாவரம் இன்றேல் தரணி இல்லை என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள் ஏனெனில் உலகின் முதல் உணவாக்கியாகவும், காப்பரணாகவும் விளங்குபவை தாவரங்களேயாகும். உணவு, மருத்துவம், பாதுகாப்பு, காலநிலைச் சீராக்கம் எனப் பலவழிகளிலும் தாவரங்களின் பயன்பாடானது பரவிக்கிடக்கின்றது. இதனால், இவை தொடர்பான கற்கைகளும் இன்று பெருவரவேற்பைப் பெற்றுவருகின்றன. இந்தவகையிலே யாழ் பல்கலைக்கழகத் தாவரவியற்றுறையினின் கண்காட்சியானது மிகுந்த வரவேற்பைப் பெறும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இன்று உலகம் வெகுவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது. உலகமயமாக்கலும், நகரமயமாக்கலும் நாளுக்குநாள் துரித வளர்ச்சிகண்டு வருகின்றன. இதனாலேற்படும் ஒரு விளைவாக நாம் தாவரங்களின் இழப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையிலே தாவரங்கள் என்பது அவர்களது கற்கை நெறிக்கான கருதுகோளாகவே நோக்கப்படுகின்றது. இதனை விடுத்து தாவரங்களின் சூழற்சமனிலை முக்கியத்துவம் தொடர்பாக மாணவருக்கு அறிவுறுத்தும் விதத்தில் கண்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

தாரவியற்றுறை சார்ந்த பரிசோதனைகள், தாவர உடற்றொழிலியற் செயற்பாடுகள் என்பன மிகுந்த சிரமம் எடுக்கப்பட்டு, பாரிய மாதிரிகளை அமைத்து அவற்றின் மூலமாக எளிய முறையிலே விளக்கப்படவுள்ளன. உயிரியலின உள்ளகம் தொடர்பான பூரண அறிவைப்பெற்றுக்கொள்ள விரும்பும் எவரும் நிச்சயமாகப் பார்வையிடவேண்டியதாக தாவரவியற்றுறை கண்காட்சி அமைந்துள்ளது. மேலும், புத்தகங்களில் உருவப்படங்களாகக் காணும் தாவரங்

தாவரவியல் துறை

களின் வாழ்க்கை வட்டங்கள் நிஜமான வடிவிலே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இது மாணவர்களுக்கு மனதிலே ஆழப்பதியக் கூடியதாக இருப்பதால் நிச்சயமாகப் பார்வையிடவேண்டிய துறையாக அமைந்துள்ளது.

இழைய வளர்ப்புப் போன்ற புதிய தொழில் நுட்ப வளர்ச்சிக்குரிய செயன்முறைகள் ஆய்வுகூட நிபந்தனைகளின் கீழ் செய்து காட்சிப்படுத்தப்பட உள்ளமையால், அவை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி பயனுள்ள தாவர இனங்கள் பலவற்றை எமது தேவைக்கேற்றவைபோல உருவாக்கிக்கொள்ள முடிகின்றது.

வெவ்வேறு வகையான தாவர சாகியங்கள தொடர்பான அறிவை வழங்கும்முகமாக இயற்கை நிலைகளில் தாவர சாகியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன்,இவற்றினது முக்கியத்துவம் மற்றும் காப்பு நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன. இன்று எமது தாவரவளம் விரைவாக இழக்கப்பட்டு வருகின்றது. அதிலும் கண்டல் தாவரங்களின் இழப்பானது மிக அதிகமாக நடைபெற்று வருகின்றது. இவை தொடர்பான விளக்கங்களும் கண்காட்சியில் இடம் பெறுகின்றன. மேலும் உயர்தர உயிரியல் பாடவிதானத்திற்குள்ளமைவானதாகத் தாழ்வகைத தாவரங்களின் உயிர்ப்பல்வகைமை, தாவர உடற்றொழிலியல், பிறப்புரிமையியல் போன்ற அலகுகளில் உள்ளடங்கும் விடயங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

தாவரங்கள் மட்டுமன்றி எமது கண்களிற்குப் புலப்படாத மிகச்சிறிய அங்கிகளும் காணப்படுகின்றன. இவ் நுண்ணங்கிகள் என்பவை, நோயாக்கிகளாகவே பொதுவாக எம்மால் அறியப்பட்டுள்ளன. ஆனால், இவற்றைப் பயன்படுத்தியும், நமக்குப் பயன்தரக்கூடிய விளைவுகளை அடைய முடியும் என்பதையும் தாவரவியற்றுறையினர் விளக்கிக்காட்டவுள்ளனர்.

நுண்ணங்கிகளின் பயன்கள் மட்டுமன்றி இயற்கை நிலைமைகளில் நுண்ணங்கிகளின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அறிந்துகொள்ள வழியேற்படுகின்றது. அத்துடன், நுண்ணங்கிகளின் காரணமாக, தாவரங்களில் ஏற்படும் நோய்கள், தடுக்கும் வழிமுறைகள் தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன.

உயர்தர உயிரியல் பிரிவு மாணவர்களுக்குரிய செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டும் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால், விஞ்ஞானக் கண்காட்சியின் முதன்மையான பகுதிகளிலொன்றாகத் தாவரவியற்றுறை விளங்குகிறது. எனவே, அனைத்துத் தரப்பினருக்கும் அரிய பல தகவல்களை வழங்கும் களஞ்சியமாக விளங்கும் தாவரவியற்றுறை கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். எனவே விரைவோம் விஞ்ஞானக்கண்காட்சிக்கு.

- விஞ்ஞான நேசன் -

ஊடக அனுசரணை: உதயன் அனுசரணை: SAMMSTECH

ஜி.சீ.ஈ. [சாதாரண தர] மாதிரிப் பரீட்சை - 2004

விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பகுதி II

விடைக்குறிப்புகள்

01.

I a, ★ இனம் - தமக்கிடையே இயற்கையாக இனங்கலந்து வளமான எச்சங்களை உருவாக்கக் கூடிய வேறுபட்ட அங்கிகளிலிருந்து ஓரியல்பேனும் வேறுபட்டுக்காணப்படும் தனியன்களின் கூட்டம் இனம் எனப்படும்.

★ குடித்தொகை - குறித்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் பல இனங்களின் சேர்க்கை குடித்தொகை எனப்படும்.

★ சாகியம் - ஒரு சூழலில் பல குடித்தொகைகள் ஒன்றுடன் ஒன்று இடைத் தாக்கம் அடைந்து காணப்படுதலாகும்.

b. ★ இறப்பு வீதம்
★ பிறப்பு வீதம்
★ குடிவரவு
★ குடியகல்வு

c. ★ எண்ணிக் கூம்பகம்
★ சக்திக்கூம்பகம்
★ திணிவுக் கூம்பகம்



d. ★ மனிதன் → நுளம்பு → பைலேரியாப்புழு

e. ★ நைற்றோசோமொனஸ் - காற்றுள்ள நிலையில் NH_4^+ ஐ NO_2^- ஆக மாற்றுதல்.
★ நைற்றோபக்ரர் - காற்றுள்ள நிலையில் NO_2^- ஐ NO_3^- ஆக மாற்றுதல்.
★ சூடோமொனஸ் - காற்றின்றிய நிலையில் NO_3^- ஐ N_2 ஆக மாற்றுதல்.

II. a. இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் போது பெற்றோரின் இயல்புகள் மரபு எச்சங்களிற்குக் கடத்தப்படும் விதம், அவற்றில் ஏற்படுத்தப்படும் மாறல் பற்றி விஞ்ஞான ரீதியாகக் கற்றல் ஆகும்.

b. ★ மிகை உற்பத்தி
★ மாறல்கள்
★ வாழ்க்கைப் போட்டி
★ தக்கனப்பிழைத்து வாழல்
★ இயற்கைத் தேர்வு என்பவற்றைக் கொண்டு வளர்க்கப்படுகின்றது

c. ★ குறுகிய வாழ்க்கை வட்டத்தைக் கொண்டு காணப்படுகின்றமை
★ நலம் தட்டல் மூலம் ஆண்பூவை பெண் பூவாகவோ, பெண் பூவை ஆண்பூவாகவோ மாற்றலாம்.
★ எளிதில் செய்கை பண்ணக் கூடியது.
★ விரைவில் பூக்கக் கூடியது.
★ உறள் பொருள் இயல்புடையது.
★ குறுகிய காலத்தில் பல சந்ததிகளை உருவாக்கக் கூடியது.

d பெற்றோரின் தோற்ற அமைப்பு = தூய உயரம் x தூயகுட்டை

♂ ♀

பிறப்புரிமை அமைப்பு = TT X tt

புணரியாக்கம்

புணரி (T) (t)

எழுந்தமான கருக்கட்டல் (Tt) ← F_1 மகட் சந்ததி

F_1 பிறப்புரிமை அமைப்பு = Tt
தோற்ற அமைப்பு - உயரம்.
உள்ளகக் கருக்கட்டல் Tt X Tt
ஒடுக்கற்பிரிவு

புணரிகள் (T)(t) (T)(t)

கருக்கட்டல்

F_2 பிறப்புரிமை அமைப்பு TT Tt tt Tt
F_2 தோற்ற அமைப்பு உய உய குட் உய
F_2 தோற்ற அமைப்பு விகிதம் = உய : குட்டை
= 3 : 1
பிறப்புரிமை அமைப்பு விகிதம் = TT : Tt : tt
1 : 2 : 1

e ★ குருதி உறையா நோய்
★ நிறக்குருடு
★ எக்சிமா

02

I a. தாவர ஒளித்தொகுப்பிற்கு CO_2 அவசியம் என்பதைக்காட்டுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

b. KOH / NAOH

c. ★ தாவரத்தினை 6 மணித்தியாலம் ஒளி உள்ள இடத்தில் வைத்தல்
★ இரண்டு இலைகளையும் தனித்தனியாக எடுத்தல்
★ இரண்டிணையும் சுடுநீரில் அவித்தல்
★ அற்ககோல் கொண்ட குழாயில் இட்டு நீர்த்தொட்டியில் வைத்து வெப்பமேற்றல்
★ ஓடும் நீரினால் கழுவுதல், இரண்டு இலையினையும் ஒற்றுத்தாளினால் ஒற்றியபின் சிறிதளவு அயடீன் கரைசல் சேர்த்தல்
★ மாற்றங்களை அவதானித்தல்

d. ★ ஒளி
★ நீர்
★ பச்சையம்

II a. ★ தன்மகரந்தச் சேர்க்கை - மகரந்தக் கூடு வெடித்து வெளியேறும் மகரந்த மணியானது வாங்கும் தன்மையுடைய அதே பூவின் குறியைச் சென்றடைதல் ஆகும்.

★ அயன் மகரந்தச் சேர்க்கை - மகரந்தக் கூடு முதிர்ந்து வெடித்து வெளியேறும் மகரந்த மணியானது வாங்கும் தன்மையுடைய அதே இன வேறொரு பூவின் குறியினைச் சென்றடைதலாகும்.

b. ★ ஒரு கால முன் முதிர்வு
★ ஏகலிங்கப் பூக்களைத் தோற்றுவித்தல்
★ தற்கருக்கட்டற்றடை
★ சமநிலைத் தம்ப உண்மை

c. இரண்டு ஆண் புணரிக்கருக்களில் ஒன்று முட்டையுடன் சேர்ந்து இரு மடியமான நுகத்தினையும் மற்றைய ஆண்கரு துணைக்கருவுடன் சேர்ந்து மும்மடியமான வித்தக விளையத்தினையும் உருவாக்குதல் இரட்டைக்கருக்கட்டலாகும்.

d. ★ ஆவியுயிர்ப்பு
★ நீரின் ஓட்டற்பண்பு இழுவிசை.
★ வேரமுக்கம்
★ மயிர்த்துளை எழுகை

e. ஒருவித்திலைத்தாவரத்தில் மாறிழையம் காணப்படாமையால் துணைவளர்ச்சி நடைபெறமாட்டாது. இதனால் ஒட்டுமுறை காணப்படாது.

03 I. a. ★ இரத்தினக்கல்
★ படிகம்
★ சுண்ணாம்பு

b.. இரத்தினக்கல் - இரத்தினபுரி, மாத்தளை, காலி
சுண்ணாம்பு - காங்கேசன்துறை, புத்தளம்.

c. இரத்தினக்கல் - ஆபரணங்களைச் செய்வதற்கு.

d.

காரீயம்	வைரம்
★ மின்னைக்கடத்தும்	★ மின்னைக்கடத்தாது.
★ உராய்வு நீக்கியாகப்பயன்படும்.	★ அழகுக்காகப்பயன்படுத்தப்படும்.
★ ஒளிமுறிவுச் சுட்டி குறைவு	★ ஒளி முறிவுச்சுட்டி கூட

e. ★ வெப்பநிலை மாற்றம்
★ நீர் உறைதல்
★ வெள்ளப்பெருக்கு
★ விலங்குகளின் இடப்பெயர்ச்சி போன்றவற்றால் ஏற்படும்

II. a. ★ ஜிப்சம்
★ களிமண்

b. ★ வாயுக்குமிழி தோன்றும்
★ இடப்பட்ட சுண்ணாம்புக் கல்லின் பரப்புக் குறையும்.
★ சுண்ணாம்புக்கல் குறையும்

c. சுண்ணாம்புக் கல்லினைத் துகல்களாக இடுதல்
HCl இன் செறிவை அதிகரித்தல்

d $Caco_3 + 2Hcl \longrightarrow Cacl_2 + Co_2 + H_2o$

$Caco_3$ 2Hcl
Ca+c+3 '0' 2 'H' + 2 'Cl'
40+12+3x16 2x1+2x35.5
40+12+48 2+71
100g 73g

73g Hcl இற்குத் தேவையான $Caco_3$ = 100g
180g Hcl இற்குத் தேவையான $Caco_3 = \frac{100 \times 180g}{73}$
= 246.5g

e. எரிசோடா தயாரிக்கப் பயன்படும்.

04. I. a. ஒளிக்கதிர் ஓர் ஊடகத்தில் இருந்து இன்னோர் ஊடகத்திற்குச் செல்லும்போது அதன் பயணப்பாதையில் ஏற்படும் மாற்றம் ஒளிமுறிவு ஆகும்.

b. இரட்டைக் குவிவுவில்லை.



C. ஒளியால் அடர்ந்த ஊடகத்தில் இருந்து ஒளியால் ஐதான ஊடகத்திற்கு ஒளிக்கதிர் செல்லும் போது முறிகோணமானது 90° ஆக அமையும். படுகோணம் அவதிக் கோணம் ஆகும்.

d. ★ கானல் நீர்
★ வானவில்
★ மீறுக்கதி தென்படும் உலகம்

II. a. பாலத்தினை அசைப்பதன் மூலம் நீளத்தையும், சுமையினை மாற்றுவதன் மூலம் இழுவையினையும் மாற்றலாம்.

b. ★ இழையின் நீளம்
★ இழையின் இழுவை
★ இழை ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தடிப்பு போன்றன பொறுத்து மாறுபடும்.

C. குறிப்பிட்ட நேரத்தில் கடதாசி எறியி வீசப்படுவதினை அவதானிக்கலாம். இசைக்கவையின் அதிர்வெண்ணும் இழையின் அதிர்வெண்ணும் சமனாகக் காணப்படுவதால் அங்கு பரிவு ஏற்பட்டு எறியி வீசப்படுகின்றது.

III. a. 1se ஒலிசெல்லும் தூரம் = 340m
∴ 8se இல் ஒலிசெல்லும் தூரம் = 340x8
= 2720m.

b. செவிச்சோணை → புறச்செவிக்கால்வாய் → செவிப்பறை மென்சவ்வு
ஏந்தியுரு என்பு ← பட்டை உரு என்பு ← சம்மட்டியுரு என்பு
நத்தைச்சுருள் → செவிநரம்பு → மூளை.

C. ★ செவிப்பறை மென்சவ்வு தடிப்படைந்திருக்கலாம்.
★ செவிச்சிற்றெண்புகள் தடித்திருக்கலாம்.

05. I. a. ★ சமிபாட்டுத்தொகுதி
★ நரம்புத் தொகுதி
★ சிறுநீரகத் தொகுதி
★ குருதிச் சுற்றோட்டத் தொகுதி

b. நரம்புக்கலம்

c. கணத்தாக்கம் கடத்தப்படும் வேகம் அதிகரிக்கும்.
நரம்புக்கலத்திற்குப் பாதுகாப்பாக அமைகிறது.

II. a. அகஞ்சுரக்கும் சுரப்பி:- ★ கபச்சுரப்பி
★ அதிரினலீன்
★ தைரொயிட்சுரப்பி

புறஞ்சுரக்கும் சுரப்பி:- ★ உமிழ் நீர்ச்சுரப்பி
★ பித்தச் சுரப்பி
★ சதையி

b. 1.S.T.H - கலப்பிரிவு வீதத்தைக் கூட்டுவதுடன் என்பு, தசை இழையங்களின்

ஜி.சீ.ஈ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004
விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பகுதி II
விடைக்குறிப்புகள்

வளர்ச்சியினை ஏற்படுத்தி உடல் வளர்ச்சியை எற்படுத்தும்.

L.H - பெண்களின் சூல் வெளியேற்றப்படுகின்றது. ஆண்களின் தெஸ்தெஸ்தரோன் எனும் ஓமோன் சுரப்பைத் தூண்டுகின்றது.

ACTH - அதிரினல் சுரப்பியைத் தூண்டி அதிரினலீன் ஓமோனை வெளியேறச் செய்தல்.

ADH - சிறுநீரகத்தில் நீரை மீள அகத்துறிஞ்சி திரவ நிலையினை பேணுகின்றது.

C. இன்சுலின்
குளுக்ககோன்

d. சதையி.

e. இன்சுலின் ஒரு புரதமாகக் காணப்படுகின்றது. இதனால் இதனை வாய்மூலம் கொடுக்கப்படும் போது சமிபாடு அடைந்து இதன் பயன் இல்லாமல் போய்விடும் என்பதால் ஊசி மூலம் குருதிச்சுற்றோட்டத் தொகுதியில் விடுவிக்கப்படுகின்றது.

06. I.a. ★ நீர் வீழ்ச்சி
★ காற்றுச்சக்தி
★ கடலலைச்சக்தி

b $R_1 = r_1+r_2+r_3$
$= 2+3+1$
$= 6\Omega$

$R_2 = r_1+r_2$
$= 8+4$
$= 12$

$1/R = 1/r_1+1/r_2$
$= 1/6+1/12$
$= \frac{2+1}{12}$
$= 3/12$
$= 1/4$

$R_3 = 4\Omega$

$R = r_1+r_2+r_3$
$= 4+4+2$
$= 10\Omega$



விளையுள் தடை = 10Ω

C. A_1 மானிவாசிப்பு
v = 30v
R = 10Ω
I = ?

V = IR
I = V/R
= 30/10
= 3A

A_2 மானிவாசிப்பு =1A
A_3 மானிவாசிப்பு = 0
A_4 மானிவாசிப்பு = 2A

d. V_1 மானிவாசிப்பு
I = 3A
R = 4Ω
V = IR
= 3x4
= 12V

V_2 மானிவாசிப்பு
I = 2A
R = 3Ω
V = IR
= 2x3
= 6V

II. a.



b. $Nacl \rightarrow Na^+ + Cl^-$
$H_2O \rightarrow H^+ + OH^-$ $(2H_2O \rightarrow H_3O^+ + OH^-)$

C. அனோட்டு C
கதோட்டு Fe

அனோட்டில்
$Cl^- - e \rightarrow Cl$
$2Cl^- - 2e \rightarrow Cl_2\uparrow$
கதோட்டில்
$H^+ + e \rightarrow H$
$2H^+ + 2e \rightarrow H_2\uparrow$
விளைவு
$Na^+ + OH^- \rightarrow NaOH$
NaOH (முடிவுப் பொருள்) $_1H_2$ $_1Cl_2$

NaOH - சவர்க்காரம் தயாரிப்பிற்கு பயன்படும்
H_2 - Hcl வாயு தயாரிக்க (மாஜரின் தயாரிப்பு, பலூன்களில் நிரப்புதல்)
Cl_2 - Hcl வாயு தயாரிக்க

07.I. a. உலோகங்களானது வளியுடன், நீருடன், அமிலத்துடன் தாக்கத்தில் ஈடுபடும் வேகத்தின் இறங்கு வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

b. ★ உலோகப் பிரித்தெடுப்பிற்கு பயன்படும்.
★ அற்பன உலோகங்களினை அறியலாம்.
★ உலோகங்கள், வளி, நீர், கொதிநீராவி என்பவற்றுடன் தாக்கம் புரியும் விதத்தினை அறியலாம்.

C. ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கம்

d. A இலும் C இன் தாக்குதிறன், அதிகமாகும்.

e. ★ தாக்கிகளின் பௌதிக நிலைமை.
★ தாக்கிகளின் செறிவு
★ வெப்பநிலை
★ ஊக்கி
★ உருவாகும் விளைவுகளின் செறிவு

II a. Cl - 2,8,8.
b. Na உடன் அயன்பிணைப்பு
C யுடன் பங்கீட்டு வலுப்பிணைப்பு

c. தனிச்சோடி e^n/ஐக் கொண்ட ஓர் அணு $e^{n/}$ பற்றாக்குறை நிலவும் பிறிதொரு அணுவிற்கு தனிச்சோடி en/I வழங்கி பங்கீடு செய்வதால் அவற்றுக்கிடையில் உருவாகும் பிணைப்பு ஈதல் பங்கீட்டு வலுப்பிணைப்பாகும்.

d. $NH_3 BCl_3$



III. a. ★ மின்பகுப்பின் மூலம்
★ தாழ்த்தல் மூலம்
★ வெப்பப்படுத்தல் மூலம்

b. ★ இரும்புத்தூது
★ கற்கரி
★ சுண்ணாம்புக்கல்

C. ஈயசல்பைட்டை வறுத்து ஈய ஒட்சைட் பெறப்படும். ஈய ஒட்சைட்டை சிறிய ஊதுளையில் இட்டு சுண்ணாம்பு, கற்கரி, இரும்புத்தூள் இட்டு சூடாக்கல்.

08. I. a ஆடலோட்ட மின்னோட்டத்தினை நேரோட்ட மின்னோட்டமாக மாற்றுதல் சீராக்கம் எனப்படும்.

b



C. ஏற்றத்தைச் சேமிப்பதன் மூலம் ஒப்பமாக்கின்றது.

d. ★ மூவாயி செய்யப்பட்ட நாட்டினை அறியலாம்.
★ pnp, npn வகையினை அறிந்து கொள்ளலாம்.
★ சேகரிப்பான், அடி, காலி என்பவற்றினை இனங்காணலாம்.

II a. விரியலாக்கியாகவும், ஆளியாகவும் தொழிற்படுகின்றது.

b. மாறும் தடையின் தடைப் பெறுமானத்தினை குறைத்தல் வேண்டும்

C. SSI
MSI
LSI
VLSI

III a. வானொலி அலை ஊடுகடத்தலை

b. ★ நுணுக்குப்பன்னி - ஒலி அலைகளினை கேள் மீடிறன் மின் அலைகளாக மாற்றுதல்
★ மின்னலையம் - காவி மின்னலைகளைப் பிறப்பாக்கின்றது.
★ மட்டிசைப்பான் - காவி மின்னலைகளையும் கேள்மீடிறன் மின்னலையையும் மட்டிசைக்கின்றது.
★ விரியலாக்கி - மட்டிசைக்கப்பட்ட அலையின் வீச்சத்தை அதிகரித்தல்

C வீச்சமட்டிசைப்பு - AM
மீடிறன் மட்டிசைப்பு - FM

09. a. தோடம்பழச் சாற்றுப்பானம் தயாரிக்கும்போது வித்துக்கள் அடர்த்திகூடியதால் அடியில காணப்படும். பின்னர் சீனி சேர்க்கும்போது பானத்தின் அடர்த்தி வித்துக்களின் அடர்த்தியிலும் கூடியதால் வித்துக்கள் மிதக்கின்றன.

b ★ குருதிச்சோகை நோயுடைய ஒருவருக்கு ஈமோகுளோபின் அளவு குறைவாகக் காணப்படும். அவர் ஓடுதல், சிறு வேலைகளைச் செய்யும்போது கலங்களுக்கு ஈமோகுளோபின் மூலம் வழங்கப்படும் O_2 குறைவடைந்தால் கலங்கள் களைப்படைய அந்நோயாளி களைப்படைவார்.

C. மழைக்காலங்களில் மண் ஈரலிப்பாக இருப்பதுடன் நிறுத்திகள் மண்ணில் தொடுமளவு குறைவாக இருக்கின்றது. இதனால், இலகுவில் புதைந்துவிடும். பலகைத் துண்டொன்றினை வைக்கும்போது தொடுபரப்பு கூட்டப்படுவதனால் அமுக்கம் குறையும், இதனால் புதையாதிப்பதற்காக பலகைத் துண்டு வைக்கப்படும்.

d. இரத்தினக்கல்லிற்கு பட்டை தீட்டும்பொழுது மேற்பரப்பு அதிகரிகப்படும். இதனால் முறிவுச் சுட்டி அதிகரிக்க இரத்தினக் கல்லினுள் புகும் ஒளிக்கதிர் ஆனது உள்ளே முழு உட் தெறிப்படைவதனால் பிரகாசம் அதிகரிக்கப்படும். இதனால் விலை அதிகமாகக் காணப்படும்.

e. காலில் சிறுகாயம் ஏற்படும்போது நுண்ணங்கித் தொற்று காணப்படும். இதன்போது நிணநீர்த் தொகுதியில் காணப்படும் நிணநீர்ச்சிறுகணுக்களில் நுண்ணங்கிகளானது வடிகட்டப்படுவதனால் அச்சிறுகணுக்கள் வீக்கமுறும். இச்செயற்பாட்டினாலேயேதான் நெறி போடப்படுகிறது.

f. முதிர்ச்சியான தேசிப் பழத்தில் காணப்படும் ஓமோன் ஆனது வெண்டிக்காயிற்கு கடத்தபடுவதனால் வெண்டிக்காய் முதிர்ச்சி அடையும்.

10. I a. அனோபிலிஸ்

b. நுளம்பு பெருகும் நீர் நிலைகளை மூடுதல், வெற்றுப் போத்தல்கள், இளநீர்ச் சிரட்டைகளை நீர் உட்புகாது வைத்தல்

C ★ பிரசாரங்களை மேற்கொள்ளல்
★ இந்நோய் தொடர்பான படங்களை தொலைக்காட்சி மூலம் காண்பித்தல்
★ விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல்
★ நோயினால் ஏற்படும் பாரிய விளைவினை மக்களுக்கு விளக்கல்

d. நுளம்பு பெருகும் நீர் நிலைகளில் நுளம்புக் குடம்பிகளை உண்ணக்கூடிய மீனினங்களை வளர்த்தல்

II a. ★ நுளம்பிற்கு எதிரான பதார்த்தத்தைக் கொண்டிருக்கவேண்டும்.
★ சூழலை மாசுபடுத்தாத வகையில் இருக்கவேண்டும்.
★ மக்களுக்கு தீங்கு ஏற்படுத்தாது இருக்க வேண்டும்.
★ நீண்ட நேரம் நிண்டெரிதல் வேண்டும்.

b. கருதுகோள் - உடலிற்கு 'சித்தாலேப' பூசுவதன் மூலம் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

செய்முறை:- ஒரே சூழலில் வாழ்கின்ற, ஒரே வயதினை உடைய, ஒரே பாலைச் சேர்ந்த, உடற்பருமனில் ஒத்த சுகதேகியான 10 பேரினை எடுத்தல். அவர்களில் ஐவருக்கு சித்தாலேப பூசியும் ஏனையோரிற்கு சித்தாலேப பூசாதும் விட்டு நுளம்புகள் இருக்கும் இடத்தில் விடுதல். இவர்கள் 10 பேரையும் அவதானிக்கும் போது பொதுவில் யாரிற்கு நுளம்பு அதிகமாகத் தாக்குகிறது எனக் கொண்டு முடிவினை எடுக்கலாம்.

C. ★ பரிசோதனைக்கு உட்படுத்துவோர் ஒரே சூழலில் வாழ்பவராகவும் ஒரே வயதினை உடையவராகவும் ஒரே பருமனை உடையவராகவும் சுகதேகி ஆகவும் இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். வேறு காரணிகளைப் பயன்படுத்தாது இருத்தல் வேண்டும்.

(மேற்படி வினாத்தாள் 06.10.2004ஆம் திகதிய உதயனில் பிரசுரமானது)



ஒருதோரை ஒருவேற்கும் வன்னி மண்ணில் மீண்டெழும் வீரி. நகரில் எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய தங்கக் உணவகம்; மதுபான விற்பனை மற்றும் உள்ளகத் தொலைபேசியும் உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகள் மன்னாட்டு வலையமைப்பு வசதியுடன் இணைந்து ஒரே நிறுவனம்.

உள்நாட்டு, வெளிநாட்டு **உணவு** வகைகள்

உள்நாட்டு, வெளிநாட்டு **மதுபான** வகைகள்



குளிரூட்டப்பட்ட அறைகள், சாதாரண அறைகள் மற்றும் திருமண நிகழ்வுகள், கருத்தரங்குகள், பணிநிறைவு பாராட்டு விழாக்கள் எதுவானாலும் சிறப்புற எத்த நூறு இருக்கைகளைக் கொண்ட மண்டப ஒழுங்குபடுத்தலுடன்...

சிறப்பான விமாற்றுச் சேவைகளை உள்ளடக்கிய

1-9 Inn தங்கம்



2004ஆம் ஆண்டில் சிறந்த உணவகங்கள் தெரிவில் முதலிடம்வென்று முன்னணியில் திகழும்

முற்கூட்டியே பதிவுகளுக்கான தொலைபேசி இல:

021 228 5944

1-9 Inn

NO. 167, KANDY ROAD, KILINOCHCHI, TEL: 021 228 5944 E-MAIL: restinn_19@yahoo.com

(C/38824) UTHAYAN Graphics

முல்லைத்தீவுச் சந்தையில் இடநெருக்கடி; சீர்செய்யுமாறு பொது மக்கள் வேண்டுகோள்!

ஒட்டுசுட்டான்,ஒக்.25

முல்லைத்தீவு பொதுச்சந்தை இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமடைந்த பின்னர் பல இடநெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது. இதனால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவுப் பகுதியில் பெரும்பாலான மக்கள் மீளக்குடியேறியுள்ள போதிலும் இச் சந்தைக் கட்டடம் திருத்தப்படாது உள்ளமையினால் பாரிய இடநெருக்கடிகளுடன்தான் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் சந்தை வளாகம் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால், வியாபாரிகளும் நுகர்வோரும் பலத்த சிரமங்களையும் சுகாதார சீர்கேடுகளையும் எதிர்நோக்கியிருக்கின்றனர்.

இந்தச் சந்தையை நவீன வசதிகளுடன் - சுகாதாரச் சீர்கேடுகள் அற்ற வகையில் கட்டியெழுப்புதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-341-203)

பால்நிலை சமத்துவம் குறித்த பயிற்சிப்பட்டறை

பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராகக் குரல் கொடுக்கும் கிளிநொச்சி மாவட்ட ஆண்கள் குழு 'ஒக்ஸ்பாம்' நிறுவன நிதியுதவியுடன் பால்நிலை சமத்துவம் தொடர்பான அடிப்படைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை கரைச்சிப் பிரதேச செயலக அலுவலர்களுக்கு நடத்தியது.

சமூகத்தில் சகல அங்கத்தவர்களுடனும் நேரடியான தொடர்பை உடைய கிராம அலுவலர்களுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்குமாக இப்பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

கிராம மட்டங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் இவ்விழிப்புணர்வைப் பெறுவதன் மூலம், கிராம மட்டங்களில் நடைபெறும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் ஒடுக்குமுறைகளும் பெரிதும் குறைக்கப்படுவதுடன் மக்களும் விழிப்படையக்கூடிய நிலைமை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-393)



சர்வதேச ஆசிரியர் தினத்தன்று பூநகரி மகாவித்தியாலய ஆசிரியர்களை வாடியடி முனியப்பர் ஆலயத்தில் வைத்து மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதினை முதலாவது படத்திலும், அவர்களைப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் ஆகியோர் ஆலயத்தில் இருந்து பாடசாலைக்கு அழைத்துவருவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)*

முல்லை. மாவட்ட அன்னையர் முன்னணி

ஒட்டுசுட்டான்,ஒக்.25

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணி நிர்வாகத்தெரிவு அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வேளினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னையர் முன்னணித் தலைவியாக துணுக்காய் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரிபத்திரியும், செயலாளராக திருமதி கு.தயாளினியும் பொருளாளராக திருமதி கமலநாயகியும் தெரிவுசெய்யப்பட்டனர். (4-341-203)

பெரியகுளம் அ.த.க. பாடசாலை பிள்ளையார் கோயில் மண்டபத்தில்!

ஒட்டுசுட்டான்,ஒக்.25

நெடுங்கேணி, பெரியகுளம் அ.த.க. பாடசாலை 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து பல இடர்களுக்கு மத்தியில் தற்போது கெருடமடுப் பிள்ளையார் ஆலய பொது மண்டபத்தில் இயங்கிவருகின்றது. நீண்டகாலமாக மேற்படி பாடசாலையை சொந்த இடத்தில் நிறுவுவதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், இப்போதுதான் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இப்பாடசாலையை அதன் சொந்த இடமான பெரியகுளத்தில் இயங்கவைப்பதற்கு 26 லட்சத்து 95ஆயிரம் ரூபா செலவில் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பாடசாலை கெருடமடுவில் இயங்கும் போது அங்கு கல்விகற்றுவரும் அப் பகுதி மாணவர்களின் நன்மை கருதி அதே இடத்திலும் ஒரு பாடசாலையை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-341-203)

ஆலடிக் கிராமத்தில் பொதுக்கிணறு

திருவையாறு,ஒக்.25

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரைச்சி கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் ஆலடிக் கிராமத்தில் திறந்த பொதுக்கிணறு அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக் கிணறு அமைப்பதற்கான இட்த்தெரிவும், பயனாளிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வும் கடந்தமாதம் கிராம முன்பள்ளிக் கட்டடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 'ஒக்ஸ்பாம்' கரைச்சி கிழக்குப் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள், பிரதேச பொறுப்பாளர்கள் மற்றும் பலர் பங்குபற்றினர். (4-393-204)

தேசிய மரநடுகைத் திட்டம் ஒட்டுசுட்டானில் ஆரம்பம்

ஒட்டுசுட்டான்,ஒக்.25

யு.என்.டி.பியின் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தேசிய மரநடுகைத் திட்டம் கடந்த 15ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் வைபவரீதியாக நடைபெற்றது.

பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி சுபாஜினி கந்தையா, ஒட்சுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி கி.ஜெயபாலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், செல்வி சுபாஜினி கந்தையா, ஒட்டுசுட்டான் அரசியல்துறைப் பொறுப்பாளர் கதிர், முல்லை மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் கருணைவேல், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய துணை முதல்வர் செல்வி நிர்மலாதேவி விசுவலிங்கம், முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் செல்வி சுபாஜினி கந்தையாவினால் மரநடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (4-341-203)

வன்னி வேளாண தொழில்நுட்ப நிறுவனம் வன்னிப்பிரதேச விவசாயிகளின் நன்மைகருதிப் புதிதாகத் தருவித்துள்ள நெல் அறுவடை இயந்திரத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

18லட்சம் ரூபா செலவில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த இயந்திரம் நெல்லை அறுவடை செய்து, சூடுமிதித்து, பொதிசெய்வதற்கு ஏற்றவகையில் துப்புரவு செய்து தரக்கூடியதாகும். *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

கிளிநொச்சியில்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க அடுத்த மாதம் நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஒக்.25

கிளிநொச்சிப் பிரதேசத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கான நடமாடும் சேவை அடுத்தமாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சேவையின்போது, அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சையில் சித்தியடைவோருக்கான செயன்முறைப் பரீட்சை, பிறிதொரு தினத்தில், நடத்தப்படும்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம், இச் செயலகத்தில் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் முன்னைய விண்ணப்பங்கள் காலவதியாகியுள்ளமையால், புதிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார். (4-305-204)

அரும்பணியாற்றிய வைத்தியருக்கு முழங்காவில் மக்கள் பாராட்டு!

முழங்காவில்,ஒக்.25

முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் இதுவரை காலமும் கடமையாற்றிய வைத்திய அதிகாரி ஜி.தர்மேந்திரா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த யுத்த காலங்களில் இடம்பெயர்ந்து முழங்காவில் பூநகரிப் பிரதேசத்தில் வசித்துவந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவுப் பிரதேச மக்களுக்குக் குறைந்த வளங்களைக் கொண்டு மிகச்சிறப்பாகச் சேவையாற்றியவர்.

நெருக்கடியான நேர காலத்திலும் அவசர சத்திரச்சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று விடுதி என்பனவற்றைத் தனியாக நடத்தி மக்களுக்குச் சேவை செய்தவர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்மாற்றலாகிச் செல்லும் வைத்திய அதிகாரி தர்மேந்திராவுக்கு அவரது சேவையைப் பாராட்டி கடந்த மாதம் முழங்காவில் பிரதேச மக்கள் பிரிவுபசார விழாவை நடத்தினார்கள்.

இந்த நிகழ்வில், முழங்காவில் அரசினர் வைத்தியசாலைப் பணியாளர்கள், நலன்விரும்பிகள், ஊர்மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4-323-204)

வறிய குடும்பங்களுக்கு 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் உதவி

திருவையாறு,ஒக்.25

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் 'ஒக்ஸ்பாம்' நிறுவன நிதியுதவியுடன் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்திட்டத்தின் ஒரு கட்டமாக மாயவனூர் பத்து வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 21 குடும்பங்களுக்கு மீள வேய்தலுக்கான கிடுகுகள் வழங்கப்பட்டன.

அத்துடன், நடமாடும் வியாபாரத்தை ஆரம்பிக்கும் நோக்குடன் 'போரூட்' நிறுவன நிதியுதவியுடன் மூன்று குடும்பங்களுக்கு ஈருருளிகளும் (சைக்கிள்), ஒரு தையல் இயந்திரமும் கொடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளி.கிழக்கு புனர்வாழ்வு அலுவலகத்தில் கடந்த மாதம் நடைபெற்றது.

இதில் 'போரூட்' நிறுவனப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்தி உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(4-393-204)

வீதி திருத்தப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஒக்.25

முல்லைத்தீவு, குமிழமுனை வீதி போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் பயணஞ் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வீதி திருத்தத்திற்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் இதுவரை முழுமையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வீதிகள் கிளறப்பட்ட நிலையில், வீதியின் அருகில் கிரவல் பறிக்கப்பட்டுள்ளது. தற்போது மழைகாரணமாக வீதி சேறும் சகதியுமாக போக்குவரத்துச் செய்யமுடியாது காணப்படுகிறது.

இவ்வீதியை திருத்தியமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையெடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-341-204)

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

JB-6.... தொடரிலக்கமுடைய Hyundai ரக புதிய வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 715556, 0114 520675. (37910)

பாவித்த பாலை மரங்கள், பனை மரங்கள், முகட்டு ஓடுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 132, கச்சேரி நல்லூர் வீதி. (37915)

"வீடற்றவன்" நூல்

1."வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் 2."பொருளோ பொருள்" நாடகத்தின் விளக்கமும் விமர்சனமும். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது விலை ரூபா 25/= (37941)

காணி விற்பனைக்கு

இல.17, கஸ்தூரியார் ஒழுங்கையில் 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி இல.17, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் அல்லது சி.குணரத்தினம், மீசாலை மேற்கு, மீசாலை. (37919)

கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டு முறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/-. 25.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வடக்குகோட்டை, R.S.K.பாம் - உடுவில் சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/38212)

பரு.பாடசாலைக்கு பழைய மாணவர் உதவி

வடமராட்சி,ஒக்.25

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கென வித்தியாலய பழைய மாணவரான, புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் மருதங்கேணியைச் சேர்ந்த கந்தசாமி மடுதாசன் இருபதாயிரம் ரூபாவை அன்பளிப்பாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கியுள்ளார். (எ-173)

SRI LANKA RED CROSS SOCIETY
POST OF BRANCH EXECUTIVE OFFICER

Applications are invited for the post of Branch Executive Officer for Jaffna Branch. Applications should be sent under registered cover to reach the Director General, C/o Chairman, Sri Lanka Red Cross Society, Jaffna Branch, No.73, Kandy Road, Jaffna on or before 3rd November 2004.

Qualifications:

Every candidate must forward satisfactory proof that he/she

a) Is not more than 55 years of age on 3rd November 2004.

b) Has passed a Degree/Diploma from a recognized University or similar institution in the field of Management Studies, Sociology/Social Science or Community Development or related fields with at least 2 years experience in the field related to the qualifications

or.

G.C.E. A/Level with 3 subjects and 7years experience in Community Development and or Social work.

or.

G.C.E. O/Level with 12 years working experience in Community Development and or Social work.

Director General,
Sri Lanka Red Cross Society, (C/38816) (26)

இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
SAAMSTECH
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

கண்ணீர் அஞ்சலி

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும் ஆலய வளர்ச்சிக்குப் பெரும் சேவையாற்றியவருமான

கனகரத்தினம் இராஜசிங்கம்

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் இழப்பால் கவலையில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக. (37931) (26-14-15)

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம். ஆலய பரிபாலன சபையினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14 - 01 - 1934

மறைவு 25 - 09 - 2004

அமரர் கதிரவேற்பிள்ளை சண்முகராசா

(கந்தையா நூலகம், கும்பளை, பருத்தித்துறை)

பாசத்தின் ஒளியில் ஒளிர்ந்த
எம் அன்புத் தெய்வமே!
எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலா!
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கும்பளை,
பருத்தித்துறை. (37937) (26-14-44) - குடும்பத்தினர்.

10 ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர்
ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ் லோஸ்
(இளைப்பாறிய பிரதம லிகிதர், சுகாதார சேவைகள் திணைக்களம்)

மண்ணில் 1929-09-30 — விண்ணில் 1994-10-24

பத்தாண்டுகள் மறைந்தன
பப்பா உங்கள் வதனம் நாம் கண்டு
பாசத்தோடு எம்மைப் பாதுகாத்தவரே!
பரமன் பாதத்தில் நீங்கள் என்றும் அமர
பக்தியோடு இறையாசி வேண்டுகின்றோம்.

நினைவில் வாழும்:
மனைவி, குடும்பத்தினர்.

'ஜொஸ் லூர்ட்ஸ்', மிருசுவில்.
(37939) (39-14-15-26)

வட்டு.வைத்தியசாலைக்கு 3 ஆம் கந்தாய மருந்துகள்

வலி.தென்மேற்கு, ஒக்.25

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமையன்று பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம் ஆகியவற்றிக்கு இவ்வருட 3ஆம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை நேரடியாகச் சென்று விநியோகம் செய்துள்ளனர். இதனை அடுத்து மேற்படி வைத்தியசாலைகளில் நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (எ-135)

புத்தகக் கண்காட்சி

வட்டுக்கோட்டை,ஒக்.25

நூலக வாரத்தை முன்னிட்டு சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் சி.சிவகணேசசுந்தரம் தலைமையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் கலந்து பயன்பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-161)

ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் 01 - 02 - 1946

விண்ணில் 06 - 11 - 2003

இராமன் கந்தசாமி (இலங்கையன்)

திதி: திரயோதசி

உள்ளம் உருகுதையா உனை நினைக்கையிலே!
அன்பின் உருவமே ஆசை அப்பாவே!
அரவணைப்பின் சிகரமே அன்பின் அப்பாவே!
அயராது எமக்காக உழைத்த உத்தமரே!
உமதாத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணாசிலையடி,
கரணவாய். (37936)(34-14-15-26) - குடும்பத்தினர்.

சிறுவர் நாடகம்

யாழ்ப்பாணம்,ஒக்.25

செயல் திறன் அரங்க இயக்க அபிவிருத்திககான அரங்கச் செயற்றிட்டத்தின்கீழ் தே.தேவானந்தவின் நெறியாள்கையில் உருவான 'தீனக்குழந்தைகள்' சிறுவர் நாடகம் இன்று திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மேடையேற்றப் படவுள்ளது. (எ-190)

நாளை முதல் நடைபெறவுள்ள
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின்

மாபெரும் கண்காட்சியில்

1) க.பொ.த.சா.த./உ.த.மாணவர்களுக்கு 66% கழிவுடன் **SAAMSTECH** இன் நேரடி வகுப்புகளுக்கு அனுமதி

2) மீண்டுமொருமுறை தொலைக்கல்விப் பாடநெறியில் ரூபா 500இற்கு 24 புத்தகங்கள், மேலும் மாணவர்களின் எழுத்தாற்றலைத் தூண்டும் ஏராளமான சந்தர்ப்பங்களும் சலுகைகளும்.

கண்காட்சியில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்

அனுசரணையாளர்:

SAAMSTECH

தலைமை அலுவலகம்:
22-1/4, Galle Rd., Dehiwala.

841, Hospital Road, Jaffna.

யாழ். மையங்கள்

★விஸ்வகுல வீதி, பருத்தித்துறை. ★கொடிகாமம் வீதி, நெல்லியடி.
★மத்திய கல்லூரிக்கு எதிரில், அச்சுவேலி. ★டச் றோட், சாவகச்சேரி.
★பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (சி-38830)(34-14-15-26)

விரைவில் சுன்னாகம், திருநெல்வேலி, கோப்பாய், வேலணை மற்றும் மானிப்பாய் ஆகிய இடங்களில் எமது யாழ். மையங்கள்.

FedEx Express

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே வழி.

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

தீபாவளியை முன்னிட்டு விசேட கழிவு 10%

மற்றும் விசேட சலுகைகளும் வழங்குகின்றார்கள்.

திருமுருகன் ஜெனரல்ஸ்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் 30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி

ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை

ஊடக அனுசரணை உதயன்

அனுசரணை SAAMSTECH

விக்னா கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழா நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் இக் கல்வி நிறுவனத்தின் அதிபர் லயன் மு.ஜெயந்திக்குமார் உரையாற்றுவதையும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் க.குணராசா, திருமதி குணராசா, யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கே.தேவராஜா, வர்த்தக ஆசிரியர் ஆர்.கருணாகரன், தமிழ் ஆசிரியர் குழந்தைவேலு, கணித ஆசிரியர் கே.சந்திரகுமாரன், யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் வன்னியசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் இரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்:தீபன்)*

கடை உடைத்து பால்மா திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.25

நல்லூர்ப் பகுதியில் உள்ள கடை ஒன்று உடைத்து அங்கிருந்த பால்மா வகைகள் உட்படப் பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள கடையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றதாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-6-139)

உரும்பிராய் இந்துவின் பரிசளிப்பு விழா

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், 'வித்தியா' சஞ்சிகை வெளியீட்டு விழாவும், புனரமைக்கப்பட்ட நூலகத் திறப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் அசுஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி சிவபாலன் சிவன்சுதன் பிரதம விருந்தினராகவும் - கோப்பாய்க் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வெளியிட்டு வைக்கப்படும் சஞ்சிகையின் முதல் பிரதியினை பழைய மாணவனும் கட்டடப் பொறியியலாளருமான ச.சசிகுமார் பெற்றுக் கொள்வார். (எ-6)

3 ஆயிரம் பனம் விதைகள் அராலி ஊரத்தியில் நடுகை

வலி.தென்மேற்கு,ஒக்.25

பனம் விதை நடும் திட்டத்தின் கீழ் சங்கானை, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கடந்த வாரம் மூவாயிரம் பனம் விதைகளை அராலி ஊரத்தி கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான காணி வெளியில் நடுகை செய்துள்ளது. சங்கததலைவர் வ.முத்துராசா, பொது முகாமையாளர் த.செல்வராசா ஆகியோர் உட்பட மற்றும் சங்க ஊழியர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பனம் விதைகளை நடுகை செய்தனர். அராலிமேற்கு கிராம அலுவலரும் இதில் கலந்துகொண்டார். (எ-135)

பனை, தென்னை வள கிளை நிறுவ அனுமதி வழங்குவதில் பின்னடிப்பு

சிவனேசன் எம்.பி. அரச அதிபருக்குக் கடிதம்

கொக்குவில்,ஒக்.25

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளுக்கான அனுமதிகளை வழங்கச் சில உதவி அரச அதிபர்கள் பின்நிற்கின்றனர். இதனால், மேற்படி சங்கங்களின் தொழில்சார் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளுக்கான அனுமதிகள் சில பிரதேச செயலர்களினால் வழங்கப்படவில்லை. இதனால், இச்சங்கங்களின் தொழில்சார் மக்கள் பாதிக்கப்படுவதுடன், சங்கங்களின் வருமானம் குறைந்து சங்கங்களை மூட வேண்டிய அபாயகரமான நிலை சில சங்கங்களில் ஏற்படலாம்.

1972 இல் ஆரம்பித்த பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்த்தெடுக்கப்பட்டு இன்று சிறப்புடன் இயங்குவதுடன் தாம் சார்ந்த அங்கத்தவருக்கும் பிரதேசத்திற்கும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் இவ்வேளையில் இவற்றின் வளர்ச்சியை விரும்பாத சிலர் மக்களைத் தூண்டி கிளைகளை அகற்றக்கோரும் கோரிக்கைகளை முன்வைப்பதுடன் பாவனையாளர்களின் தவறான செயற்பாடுகளைப் புனைந்து சமூக அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலைமைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து குறித்த சங்கங்களின் பிரதிநிதிகளை பிரதேச செயலர்கள் அழைத்து அவர்களின் நடைமுறைப் பிரச்சினைகளையும் இனங்கண்டு ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும வழங்க வேண்டும்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத நிலையை உருவாக்குவதுடன் இந்நிறுவனம் சார்ந்த தொழில் சார் மக்களின் வருமானம், சமூக மேம்பாடு என்பவற்றின் அவசியத்தையும் உணர்த்தி சமநிலையை ஏற்படுத்துவதற்குத் தங்களின் அறிவுறுத்தல்களை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கட்டாக்காலி நாய்களின் தொல்லை வடமராட்சிப் பகுதியில் அதிகரிப்பு

வடமராட்சி,ஒக்.25

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அல்வாய் வடக்கு, பொலிகண்டி கிழக்கு, திக்கம் (மானாண்டி), பொதுச்சந்தைப்பகுதி ஆகிய இடங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் வெகுவாக அதிகரித்துள்ளன.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் இக்கிராமங்களுக்கு ஊடாக சென்று வரும் பொது மக்கள் இரவு, பகல என்றில்லாது பெரும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் இவற்றில் இருந்து விடுபடக் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறும் இக்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அவ்வப்பகுதிக்குப் பொறுப்பான சுகாதாரப்பரிசோதகரிடம் புகார் தெரிவித்துள்ளனர். (4-173)

உடுத்துறை ம.வியின் உதைபந்தாட்ட அணிக்கு சீருடைகள் அன்பளிப்பு

வடமராட்சி,ஒக்.25

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலய உதைபந்தாட்ட அணியைச் சேர்ந்த மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகளை வித்தியாலய பழைய மாணவரான பிரான்ஸ் நாட்டில் வதியும் எஸ்.செல்லையா வழங்கியுள்ளார். (4-173)

பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஒக்.25

பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதிக்கு மின் விநியோகம் வழங்குவதற்கு இலங்கை மின்சார சபையின் சித்தன்கேணி மின் அத்தியட்சகர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வாரம் இவ்வீதியில் மின்கம்பங்கள் புதிதாக நடுகை செய்யப்பட்டு மின் கம்பிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இப்பகுதி மக்கள் நீண்ட காலமாக மேற்படி வீதிக்கு மின் விநியோகம் செய்து தருமாறு இலங்கை மின்சார சபையின் யாழ்.மாவட்ட பொறியியலாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனை அடுத்து இவ்வீதிக்கு மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன. (எ-135)

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விசாகரூபனின் 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற நூல் கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. நூலின் முதற்பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைக்க கல்வியியற் பீடாதிபதி மா.சின்னத்தம்பி பெற்றுக்கொள்வதை முதலாவது படத்தில் காணலாம். நூலாசிரியர் இ.விசாரூபன் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் படத்தின் மத்தியில் உள்ளனர். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்தில் காணலாம். *(படங்கள்:கவிதரன்)*

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு வெதுப்பகங்களுக்குச் 'சீல்'!

யாழ்ப்பாணம்,ஒக்.25

உடுப்பிட்டிப் பகுதியில் இயங்கிவந்த இரண்டு வெதுப்பகங்கள் சுகாதாரத்திற்கு முரணாக இயங்கியமையினால் மூடப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ்மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையிலான பொதுச் சுகாதாரப்பரிசோதகர் குழு நடத்திய சோதனையின் போதே இந்த வெதுப்பகங்கள் சுகாதாரச் சீர்கேடாக இயங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வெதுப்பக உரிமையாளர்களிடம் தலா மூவாயிரம் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் வெதுப்பகம் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (4-202)

நவாலி பிரதான வீதியோரமாக கழிவுகள் கொட்டப்படுகின்றன

வட்டுக்கோட்டை,ஒக்.25

நவாலிப் பகுதியில் பிரதான வீதிக்கு அருகில் பெருமளவு கழிவுப்பொருள்கள் இரவோடு இரவாக வாகனங்களில் ஏற்றிவரப்பட்டுக் கொட்டப்படுன்றன.

நவாலி வழுக்கையாற்றுப் பகுதியை அண்மித்த பிரதான வீதியின் அருகிலேயே இவ்வாறு கழிவுப்பொருள்கள் கொட்டப்படுகின்றன என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச சபையின் எல்லைப் பகுதியில் அமையும் இந்தப் பிரதான வீதியின் இரண்டு சபைகளுக்கும் சொந்தமான பகுதிகளிலும் 'தகரம், கண்ணாடிச்சிதறல்கள், பிளாஸ்ரிக் கழிவுகள், தலைமயிர் போன்ற கழிவுகள் காணப்படுகின்றன.

இத்தகைய கழிவுகள் கொட்டப்படுவதை உடனடியாகத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்காவிடில் இப்பகுதியும், கல்லுண்டாய், நாவாந்துறைப்பகுதிகளில் உள்ள கழிவு கொட்டப்படும் பகுதி போன்று காட்சியளிக்கலாம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-161)

யாழ்.நகரப் பகுதியில் விரைவில் மேலும் இரண்டு திரை அரங்குகள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் திரைப்படங்களைத் திரையிட யாழ்நகரில் மேலும் இரு திரை அரங்குகள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

தொடர்ந்து அடுத்த ஆண்டு தமிழ், சிங்களப் புதுவருடத்திற்குள் மற்றொரு நவீன திரை யரங்கு ஒன்றும் திறக்கப்படவுள்ளது.

இரண்டாவது ஈழ யுத்தம் ஆரம்பமான 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்நகரில் 11 திரையரங்குகளும், புறநகர்ப்பகுதிகளில் சுமார் 12 திரையரங்குகளும் இயங்கிவந்தன. இரண்டாவது ஈழ யுத்தத்துடன் திரையரங்குகள் மூடப்பட்டன. சில திரையரங்குகள் விமான, ஷெல் தாக்குதல்களினால் முற்றாகச் சேதமடைந்திருந்தன.

இரண்டாவது ஈழ யுத்தத்தைத் தொடர்ந்து சுமார் 10 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்நகரில் முதன் முதலாக திரை அரங்கு ஒன்று இயங்கத்தொடங்கியது. இதனைபடுத்து புறநகர்ப்பகுதிகளான சுன்னாகம், இணுவில், சங்கானை, அச்சுவேலி ஆகிய இடங்களிலும் திரை அரங்குகள் திறந்து வைக்கப்பட்டன. சில வாரத்திற்கு முன்னர் பண்டத்தரிப்பிலும் திரை அரங்கு ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் எதிர்வரும் தீபாவளி தினத்திற்கு முன்னதாக யாழ்நகரில் ஏற்கனவே இயங்கிவந்த இரு திரை அரங்குகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றில் ஒன்று (சாந்தி தியேட்டர்) விமான, ஷெல் தாக்குதல்களால் முற்றாகச் சேதமடைந்திருந்தது. அத்திரை அரங்கு மளவும் முன்னர் இருந்த திரையரங்கு போல கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்திரையரங்கு குளிரூட்டப்பட்டதாகும்.

இதேவேளை கொழும்பு நகரில் தற்போது நிறுவப்பட்டு வரும் நவீன திரை அரங்கு போன்று இங்கும் ஒரு திரையரங்கு கட்டப்பட்டு வருகின்றது. அந்த நவீன திரை அரங்கு அடுத்த ஆண்டு புதுவருடத்தில் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-173)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

வர்த்தக மாணவர் ஒன்றியம்

எமது ஒன்றியத்தின் 10 ஆவது 'வரவு' சஞ்சிகை வெளியீட்டு நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 23.10.2004 இல் நடை பெற்றது. இதன்படி அதிர்ஷ்டசாலிகளின் சீட்டு இலக்கம் வருமாறு:-

முதலாம் பரிசு - 1271
இரண்டாம் பரிசு - 2572
மூன்றாம் பரிசு - 4419

ஆறுதல் பரிசில்கள்

1. 0023	2. 3696	3. 5444	4. 4194	5. 3758
6. 5938	7. 5120	8. 2479	9. 2237	10. 1342

அதிர்ஷ்டசாலிகள் தங்களது அதிர்ஷ்டத்தை 10.11.2004 இற்கு முன்னார் ஒன்றியத்தலைவரிடம் உறுதிசெய்து கொள்ளவும்.

யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். வர்த்தக மாணவர் ஒன்றியம்.
(37947) (43-16-15)

Jaffna Social Action Center

JSAC

(Registered Under the Voluntary Service Organization. Reg. No J/DS/SS/NGO/13)

159,4th CROSS STREET, JAFFNA TP :0212223699

JSAC is a local NGO based in the Jaffna Peninsula, working in the field of social services, protection and income generation projects as an implementing partner of

UNHCR, UNICEF & USAID OTI

We hereby invite applications for the post of:

Co-ordinator

This challenging senior role requires a dedicated person with a sound background in social services and project management. We expect that applicants will have at least three years experience in the aforementioned fields. The role has a large component of Human Resource Management, Computer skills and English language skills.

Please send your Curriculum Vitae (should include quick contact telephone number and one page description of your work experience) on or before 29th of October 2004 to:

President
JSAC
159, 4th Cross Streets
Jaffna. (C/38833)(43)

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஐப்பசித் திங்கள் 9ஆம் நாள் இன்று (25.10.2004) திங்கட் கிழமை காலை 6.30 மணியளவில் வரும் சுப வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

"மகாசக்தி பெஷன்"

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து திறப்பு விழா நடைபெறுகின்றது. எமது அன்பு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

333/2, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
திரு.திருமதி க.செல்வரத்தினம். (உரிமையாளர்)
(அ-38831)(43-16-15)

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் கலாசார உத்தியோகத்தராகவும் சாவகச்சேரி நகரசபையில் வருமான மேற்பார்வை உத்தியோகத்தராகவும் கடமையாற்றுபவரான

திரு. சி. கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

திருமதி சின்னையா பொன்னம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. (38835)(33-43-16-15)
சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச்சங்கம்.

விஞ்ஞான சங்க ஏற்பாட்டில் வினாடி விடைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக.25

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசப் பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞானப் போட்டிகளை நாளை மறுதினம் புதன்கிழமை நடத்தவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 10மணி முதல் 11 மணிவரை வினாடிவிடை எழுத்துப் போட்டியும், 11.15 மணிமுதல் 12.15 மணிவரை கட்டுரைப் போட்டியும் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைகள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் -

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைகள், வட இந்து மகளிர் கல்லூரியிலும் -

கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரீட்சைகள் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சையில் பங்குபற்றுவதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள், உதவிப்பொதுச் செயலர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், விவசாயபீடம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3-204)

வார இறுதியில் பயிற்சி வகுப்புக்கள்

இலங்கை நிர்வாக சேவை 2001 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

அரச சேவையிலுள்ள கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கம் நடத்தும் இப்பயிற்சி வகுப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் சங்கத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்யாதவர்களும் இணைந்து கொள்ளலாம்.

சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் இவ்வகுப்புக்கள் ஆரம்பமாகும். (3-204)

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி வழங்கல்

நெல்லியடி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று திங்கட்கிழமை தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

காலை 9 மணி முதல் 10.30 மணிவரை கரணவாய் கிழக்கு உச்சில் அம்பாள் சனசமூக நிலையத்திலும் காலை 11 மணி முதல் நண்பகல் 12.30 வரை நெல்லியடி ஐயனார் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 1 மணி முதல் 2.30வரை நெல்லியடி தடங்கன் புளியடி சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. (எ-202)

★ ★ ★

சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி மருந்து இன்று திங்கட்கிழமை ஏற்றப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிமுதல் 10.30 மணி வரை சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையத்திலும் 11 மணிமுதல் 12.30 மணி வரை மூளாய் பிள்ளையார் கோயிலடியிலும் - நண்பகல் 1 மணிமுதல் 2 மணிவரை தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்திலும் - பிற்பகல் 3 மணிமுதல் 4.30 மணிவரை தொல்புரம் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்திலும் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படவுள்ள தாக சுழிபுரம் பொதுசுகாதார பரிசோதகர் விரதீசன் தெரிவித்தார். (எ-135)

நிறுவுநர் தின விழா

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் நிறுவுநர் தின விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன. அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர். விழாவில் நிறுவுனர் தின நினைவுப் பேருரையினை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பி.அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (ஐ-78)

ஆசிரியர் தொடருறு செயலமர்வு

குடத்தனை,ஒக.25

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12, 13 வகுப்புக்களில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தொடருறு கல்வி வேலைத்திட்ட செயலமாவு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க் கிழமையும் இரு தினங்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-78)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 06 1948

உதிர்வு 06 11 2003

இரத்தினம் தெய்வானை
(பாலம்மா)

ஓராண்டும் ஆயிற்றோ ஒளிவிளக்கு அணைந்து
தீராத வேதனையால் தினந்தினம் தவிக்கின்றோம்
மாறாத உம் நினைவால் மனந்தினம்துடிக்கின்றதே
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பணிகின்றோம்.

இன்று (25.10.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொற்றாவத்தை, கரணவாய் வடக்கு. (37950)(33-43-16-15) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

ஐயாத்துரை கந்தலிங்கம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கந்தலிங்கம் 23.10.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் ஐயாத்துரை - இரத்தினம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும் அமரர் நாகமணி - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் இராதாக்கிருஷ்ணன் (சுவிஸ்), பராசக்தி, இராமகிருஷ்ணன் (ஜேர்மனி), கிரியாசக்தி (கனடா), யோகாசக்தி கிருபானந்தகிருஷ்ணன், சாந்தசக்தி, சிவகிருஷ்ணன், நவகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கம் (ஆசிரியர், நெல்லியடி ம.ம.வி.), குமாரலிங்கம் (சாரதி, இ.போ.ச.), மணிமேகலை (ஜேர்மனி), முருகலிங்கம் (கனடா), ரூபவதி கனடா), சுந்தரவதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவமலர், க்ணேசலிங்கம் (பாதுகாப்பு அலுவலர், யாழ்.பல்கலைக்கழகம்), சிவராணி, கனகமணி, புனிதவதி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வசந்தமலர், சற்குருநாதன், சத்தியபாமா, தங்கராசா, வெற்றிவேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலசுப்பிரமணியம், நேசராசா, சிவயோகநாதன் (அலுவலர், பிரதேசசபை உடுவில்), ரஞ்சகுமார் ஆகியோரின் அன்புச் சகலனும் ஜெகதா, மகேஸ்வரராஜ் (ஆசிரியர், வயாவிளான் ம.ம.வி), தாரணி, சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிகன், நேசனா, மகீசன், அதிஸ், கேதுஸா, பிறின்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான், ஏழாலை. T.P.:06022212500 (37951)(43-16-15) தகவல்: குடும்பத்தினர்.

வல்லிபுரம் சுப்பையா



(முன்னாள் பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கைதடி)

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பையா அவர்கள் நேற்று (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - கண்ணாத்தைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சுப்பர் - கற்பகத்தின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வானைப பிள்ளையின் அன்புக் கணவரும் செல்லையா (கனடா), தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருஷ்ணசாமி (சுவிஸ்), நாகரத்தினம், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகோபால் (சுவிஸ்), நாகேஸ்வரி, கிருஷ்ணபகவான் (கனடா), நாகலஷ்மி (கனடா), கிருஷ்ணதேவன், நாகபூபதி (கனடா), நாகபுஸ்பம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்தங்கத்தின் பெரியதந்தையும் சிவசோதி (சுவிஸ்), சிவசுப்பிரமணியம், மல்லிகாதேவி, ருக்மணி (சுவிஸ்), கதிர்காமநாதன் (லிகிதர், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுவுச்சங்கம்), சிவாநிதி (கனடா), விஜயகுமார் (கொழும்பு), யசோதா, நல்லநாதன் (கனடா), காலஞ்சென்ற செல்வரத்தினம், பீதாம்பரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந், துசாந், சோபிசாந், வதனா, விக்னேஸ்வரன், தயாரூபன், சர்மிளா, ஜெனோபன், காலஞ்சென்ற நிசாந்தி, பிரியந்தா, முரளிதரன், சிறிதரன், ருகீனா, ஜெயகாந், ஜெனித்தா, சுகிசன், விமேஸ், விஜித்தா, லக்ஷிதா, லக்ஸ்மிதா, கஜீவன், காலஞ்சென்ற லக்கீசன், சஜீவன், சுஜீவன், லஜீபன், செலீனா, சுமன், சிம்சோன், ரவிக்குமார், நேசராணி, கருணாகரன், ரவீந்திராதேவி, பாஸ்கரலிங்கம், மல்லிகாதேவி, பார்த்தீபன், தயந்தினி, சத்தியசீலன், உமாதேவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆசினி, அபிசனா, கரீஷன், அனோஜென், கீர்த்தனா, வினோத், விதுஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"ரட்ணேஸ்வரி வாசா" கைதடி தெற்கு, கைதடி. (37949)(43-16-15) தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

யாழ்ப்பாணம் நூலகம் மீண்டுக்கும் சேவை

தமிழர் தேசியத்தை நிலைநாட்ட விளையாட்டுக்கும் முக்கிய பங்குண்டு

மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி

யாழ்ப்பாணம்,ஒக்.25

விளையாட்டுத் துறைக்கென எமது தலைவர் தனிஇடம் வைத்துள்ளதுடன் அதில் கூடிய அக்கறையும் காட்டி வருகின்றார். விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அது ஆனந்தம் கொடுக்கும் நிகழ்வாகவும் உற்சாகம் கொடுக்கும் நிகழ்வாகவும் காணப்படுகின்றது.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையேயான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் திருமதி சறோஜினி சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கலைவிழி:-

சமாதான காலத்தில் தமிழீழத்தின் விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதற்குப் பல நடவடிக்கைகளைத் தமிழீழ விளையாட்டுத் துறை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் தமிழர்களின் தேசியத்தை நிலைநாட்டுவதில் விளையாட்டுத்துறையும் கூட ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

அண்மையில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் பல சிறிய நாடுகளும்கூட விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொண்டு தமது தேசியத்தை நிலைநாட்டியதை நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம்.

இதேபோன்று ஒவ்வொரு இனமும் தமது தேசியத்தை அடையாளப்படுத்துவதற்கும் கூட விளையாட்டைப் பயன்படுத்திக் கொள்கின்றன. நிச்சயமாக எமது தேசமும் கூட விளையாட்டின் மூலம் எமது தேசியத்தை சர்வதேசத்தில் நிலைநாட்டி நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எம்மிடையே எத்தனையோ வீர, வீராங்கனைகள் இருக்கிறார்கள் இன்னும் ஒரு பகுதியினர் இலைமறை காயாக இனம் காணப்படாமலும் இருக்கின்றார்கள். இந்த வகையில் எமது வலைப்பந்தாட்ட அணியில் இருந்த வித்தியா என்ற இளம் வீராங்கனை சிறிலங்காவின் தேசிய அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

எமது தேசியம் நிலைநாட்டப்பட்டு உறுதிப்படுத்தப்படும்போது விளையாட்டுத்துறையில் பல வீர, வீராங்கனைகள் இணைக்கப்படுவதுடன், பலரை உருவாக்கவும் முடியும் எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் முன்னாள் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் திருமதி. ஜே.எப்.எ.ரூபசிங்கா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ப-86-190)

மக்களை புலிகளிடமிருந்து பிரித்துவிடப் பார்க்கிறார்கள்

சர்வதேச நாடுகள் குறித்து பத்மினி எம்.பி.

வலி.வடக்கு,ஒக்.25

சர்வதேச நாடுகள் பலவும் தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அந்நியப்படுத்த வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருப்பதுடன் அந்த முயற்சிலும் கூட மிகவும் துல்லியமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மேற்கண்டவாறு யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் குறிப்பிட்டார்.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் கொக்குவில் கிழக்கு பிரம்படியில் படுகொலைசெய்யப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் அஞ்சலி நிகழ்வு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் நினைவுக்கல் வைக்கப்பட்டுள்ள ஆடிய பாதம் வீதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட திருமதி பத்மினி சிதம்பரநாதன் தொடர்ந்து உரையாற்றும் போது:-

உலக நாடுகளின் தூதுவராலயங்களுடன் நாம் அண்மையில் சந்திப்புக்களை மேற்கொண்டோம். தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து எம்மைப்பிரித்து வைக்கவேண்டும் என்ற அடிப்படையில் செயற்படுகிறார்கள் என்பதை அப்போது உணரக்கூடியதாக இருந்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஏன் நீங்கள் இருக்கிறீர்கள் ஒரு கட்சியின் பெயரில் நீங்கள் செயற்படலாம் என்றெல்லாம் ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். கட்சியின் பெயரில் செயற்படும் படியும் கூறுகிறார்கள். இவைகள் எல்லாம் எதனைக்காட்டுகின்றன என்றால் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரித்துவிடவேண்டும் என்பதையே.

மற்றும் நாமகள் வித்தியாலய அதிபர் க.சிவபாதசுந்தரம், கொக்குவில் கிழக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி சி.நவரத்தினம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

(ப-86)

சிங்கள, பாளி மொழிகளையும் தமிழ் அறிஞர்கள் ஆராயவேண்டும்

பேராசிரியர் சண்முகதாஸ்

சிங்கள மொழி மற்றும் பாளி மொழிகளைக் கற்பதன் மூலம் ஈழத்தமிழர் களின், அறிஞர்களின் இலக்கியங்கள் பற்றி யும் அவர்களின் வரலாறுகள் பற்றியும் அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ்

மாகாணத்தமிழ் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் தலைமையேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின்னரும் 13 ஆம் நூற்றாண்டு எழுதப்பட்ட சரசோதி மாலைக்கு முன்னரும் எமது ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஒரு நீண்ட இடைவெளி தோன்றியுள்ளது. அந்த இடைவெளிக்காலத்திலே ஈழத்தில் இருந்த தமிழர் எவ்விதமான இலக்கிய ஆக்கமும் செய்யவில்லையா. எனபதனை நீண்டகாலமாக ஆராய முடியவில்லை. ஏனெனில் அவை தொடர்பான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

இதுவரை சான்றுகள் கிடைக்காமைக்குக் காரணம் என்ன வென்றால் நீண்ட காலமாகச் சிங்கள மொழிமீது இருந்த வெறுப்பின் காரணமாக எம்மவரில் சிலர் சிங்கள மொழி மற்றும் பாளி•மொழியினைப் படிக்காமல் விட்டுவிட்டனர். சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள பல சான்றுகளில் தமிழ்மொழி பற்றிய பல மேற்கோள்கள் காணப்படுகின்றன. அண்மையிலேயே இதனை ஆராய்வதற்காகன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இக்காலகட்டங்களில் ஈழத்து எழுத்தாளர்கள் வெறுமனே சும்மா இருக்கவில்லை இலக்கியங்கள் எழுந்திருக்க வேண்டும். இவற்றை ஆராய வேண்டியநிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு சிங்கள, பாளி மொழிகளிலுள்ள இலக்கியங்களை அறிஞர்கள் படித்து ஆராய வேண்டிய தேவை உள்ளது. இந்த வகையிலே எங்களுடைய மண்ணில் எழுந்த இலக்கியங்களில் வரலாற்றை நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம் - என்றார்.

(ப)

இனிமேலும் விட்டுக்கொடுத்தால் போராட்டங்கள் அர்த்தமற்றதாகிவிடும்

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி



கோப்பாய்,ஒக்.25

இன்றைய சூழலில் விடுதலைப்புலிகளினால் விட்டுக்கொடுப்பதற்கு எதுவுமேயில்லை அவ்வாறு விட்டுக்கொடுப்பு நிகழுமேயாயின் இதுவரை நடைபெற்ற போராட்டங்கள் யாவும் அர்த்தமற்றதாகிப்போய்விடும். இந்நிலைக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி. 2ஆம் லெப் மாலதியின் 17 ஆவது நினைவு தினக் கூட்டம் அண்மையில் கோப்பாய் கந்தசுவாமி கோவில் வீதியில் யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் விவகாரக் குழுத்தலைவி திருமதி வேதவல்லி செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இன்று சிறிலங்கா ஜனாதிபதி உலகில் புலிகளிற்கு மாசு கற்பிக்கும் வகையில் ஒன்றிணைந்த பிரசார யுக்தியை மேற்கொண்டு வருகிறார்.

அதனை அதே பாணியில் முறியடிப்பதற்காக இன்று எமது அரசில்துறைப் பொறுப்பாளர் வெளிநாடுகளிற்கு பயணத்தை மேற்கொண்டுள்ளார். விடுதலைப் புலிகள் பல்வேறு காலகட்டங்களில் அவ்வப்போது ஏற்படும் தடைகளை அவர்களுக்கே உரித்தான மதிநுட்ப பாணியில் முறியடித்துள்ளனர்.

இவற்றுக்கு எமக்குப் பலமாக இருந்தது எமது படையணிகளாகும். இப்படையணிகளில் 50 வீதம் பெண்கள் பொறுப்பேற்றிருந்தமை அவாகளின் வீரத்திற்குச் சான்று பகர்கின்றது.

இதே சமபங்களிப்பு இன்றும் தொடர்ந்து இராணுவ சமநிலை பேணப்படுகிறது. இன்று பெண்கள் எமது சமூகத்தில் பல முதன்மை நிலைகளை வகிப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவையாவற்றிற்கும் எமது தலைவரின் தூரநோக்கிலான சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். இருந்த போதிலும் அவ்வப்போது சமூகத்தில் உள்ள பழமை முறைகள் சில இன்றுவரை தொடர்ந்து தமிழீழப் பெண்களின் வாழ்வில் சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக சீதனமுறைமை இன்றும் தமிழீழப் பெண்கள் பலரின் வாழ்விற்கு பலத்த சவாலாக இருந்து வருவது கவலைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் எமது மக்கள் யாவரிலும் ஒருமித்த விட்டுக்கொடுப் புணர்வு ஏற்படவேண்டும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தனது ரையில்:- ஆணும், பெண்ணும் சமத்துவமாக இங்கு செயற்பட்டதனால் பல முன்னேற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. பாரம்பரிய முறைகளில் நாம் வளர்ச்சியைக் காணமுடியாது.

எமது போராளிப் பெண்கள் ஒரு நாட்டை மீட்க, மீளக்கட்டியெழுப்ப, விடுதலையடையவைக்க களத்திலும் சரி நிர்வாக செய்பாடுகளிலும் சரி சிறந்தகள மருத்துவராக, களப் பொறியியலாளராக, கனரக ஆயுத இயக்குநர்களாக மற்றும் இன்னோரன்ன வீரதீர செயற்பாடுகளில் தமது திறமையை வெளிப்படுத்தி நிற்கிறார்கள். அவற்றை எல்லாம் பார்க்கும் போது எமது பெண்களின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமையடைகிறோம் என்றார்.

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் அரசியல் பிரமுகர்களும் உரையாற்றினர். நிகழ்வுகளின்போது அக்கினிப் பறவைகள் பாகம் - 2 ஒலி - ஒளி இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கடற்புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் வெளியீட்டு வைக்க முதல் பிரதியை 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் தந்தையார் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணனும் மதிப்பீட்டுரையை வெளிச்சம் ஆசிரியர் வே.கருணாகரனும் நிகழ்த்தினர்.

மேலும் நிகழ்வுகளில் காட்சியும் கானமும் நாட்டிய நிகழ்வு, நாடகம், ராகம்ஸ் இசைகுழுவினரின் எழுச்சிப் பாடல்கள், இன்னிசை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான தமிழீழ மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

(ப - 7)

கற்றதை, கற்பித்ததை ஆய்வு செய்வதற்கே பரிசளிப்பு நிகழ்வு

வலி. கல்வி பணிப்பாளர் விளக்கம்

வலி.தெற்கு,ஒக்.25

'ஆசிரியர்களும் மாணவர்களும் கடந்த வருடத்தில் தாம் மேற்கொண்ட வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளை ஆய்வு செய்யும் ஒரு நிகழ்வாகப் பாடசாலைப பரிசளிப்பு விழாவினைக் கருதவேண்டும்'

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர்தின விழாவும் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக உரையாற்றிய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இவ்வாறு கூறினார்.

பாடசாலை திறந்தவெளியரங்கில் அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் விழா நடைபெற்றது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ப.ஜெயகுமாரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி அ.தற்பரானந்தன் நிறுவுநர்தின உரையினை நிகழ்த்தினார்.

வளர்ந்துவரும் இப்பாடசாலையின் கற்பித்தலை மேம்படுத்த கணனி, தொலைக்காட்சி, படமெறிக் கருவி (Over Head Projector) போன்ன தேவைப்படுவதாகவும், மாணவர் கற்பதற்குரிய ஆறு வகுப்பறை அல்லது மண்டபம் மற்றும் மேசை, கதிரைகளும் அவசியம் தேவைப்படுவதாக அதிபர் க.செல்வக்குமாரன் தமது தலைமையுரையில் கூறினார்.

திருமதி றெஜினா இருதயநாதன் தமது உரையின் போது மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் மாணவர்களுக்கு எவற்றையெல்லாம் கற்பித்தோம் அவற்றால் பயன் கிடைத்ததா? எவ்வளவு பேர் கற்றலில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்பதை ஆசிரியர்கள் ஆய்வுசெய்துகொள்ளவும், மாணவர்கள் தாம் கற்றலில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பதை அறிந்துகொள்ளவும், அடுத்த வருடத்திற்குத் தமது செயற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்வற்கும் வாய்ப்பளிக்கும் ஒரு நிகழ்வாகப் பரிசளிப்பு தினம் அமைகின்றது.

பரிசுபெறாத பிள்ளைகள் அடுத்த வருடம் தாம் பரிசு பெற வேண்டும் என்ற இலக்கை நோக்கிக் கற்றலில் தமது கவனத்தை ஊக்கத்துடன் தொடர வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினராக உரையாற்றிய உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன்-

மாணவர்களின் முன்னேற்றத்தால் பெற்றோர்களுக்குக் கூடிய பொறுப்புண்டு. பாடசாலையில் கற்றவற்றை மாணவர் வீட்டில் மீட்டல் செய்வதற்குச் சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது. மாலைவேளைகளில் - படிக்கின்ற நேரத்தில் - பெற்றோர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது அவர்களுக்கு இடையூறாக அமைகின்றது.

கற்றல், கற்பித்தல் நேரங்களில் சில ஆசிரியர்கள் தமது குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபடுவதும், அதிகரித்த லீவு எடுத்துக்கொள்வதும் மாணவரின் கற்றலுக்கு இடையூறாக உள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளை அவர்கள் தாங்களே உள்வாங்கிக் கொண்டு, மாணவர்களுக்கு அவற்றை வழங்கத் தவறிவிடுகின்றனர். கற்றல், கற்பித்தல் என்பது பாடத்தை ஒப்புவித்தல் அல்ல. மாணவர்களுடைய ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வளரச் செய்வதாகும். இதனை ஆசிரியர்கள் புரிந்துகொண்டு செயற்படவேண்டும் - எனக் கூறினார்.

மாணவர்களுக்கு திருமதி றெ.இருதயநாதன் பரிசுகளை வழங்கினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(ப-152)

சேவை நலன் பாராட்டும் வாழ்த்தும்

உயர்திரு. தம்பு கந்தசாமி

S.L.T.S. - I.

1970ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரிய சேவையை ஆரம்பித்து, யா/சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1985ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகவும் 1999 முதல் அதிபராகவும் கடமையாற்றி இன்று (25-10-2004) பிறந்தநாளுடன் சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது அதிபரை, பல்லாண்டு காலம் நோய் நொடி இன்ற வாழ, எல்லாம்வல்ல நல்லூர்க் கந்தனை வேண்டி நிற்கின்றோம்.

(37912) (26-14-44) - ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

கழகத்தின் சமூகசேவை நிதிக்காக நடத்தப்படும்

"கிராமிய இசை, நடன சங்கமம்"

இடம்: தம்பையா மண்டபம்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.

காலம்: 27, ஒக்ரோபர் 2004 புதன் பிற்பகல் 2 மணி.

அன்பளிப்பு: 1,000/-
500/-
200/-

மாணவர்களுக்கு: 100/-

(துழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலிலும், றோட்டறிக் கழக உறுப்பினர்களிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்)

(C/38478)(42-14-44-26)

இன்சுலின்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரையை வாசிப்பதன் மூலம் மக்கள் சரியான சிறுகுறிஞ்சாவை அடையாளம் கண்டு மிக்க பயனடைவார்கள் என நம்புகின்றேன்.

சிறுகுறிஞ்சாவின் பூக்கும் பருவம் ஒக்ரோபா தொடக்கம் பெப்ரவரி மாதம் வரையாகும். இதில் Gymnemin, hentriacontane, Pentatriacontane, Tartaric acid, Anthraquinone, Resin எனும் மருத்துவ இரசாயனப் பொருள்கள் அடங்கியுள்ளன.

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட உடன்சாறு அல்லது சிறுகுறிஞ்சா இலை இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைக்க வல்லது. இது மறைமுகமாகக் கணையத்தின் (Pancreas) B - கலங்களைத் தூண்டி, இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்துகிறது என்பது தற்போது ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மனித உடலின் குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்காக்குவதுடன் சிறுநீர் உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.

எனவே, சிறுகுறிஞ்சாவானது வெல்ல நீரிழிவிற்கு (Insulin Non Dependent Diabetic) சர்வ நிவாரணியாக அமைகிறது.

எனவே, உணவு பற்றிய விழிப்புணர்வை முழுமையாகப் பெற்றுச் சரியான ஓர் உணவுத் திட்டத்தை (Diet scheme) வகுத்துப் பயனடையலாம் சித்த மருத்துவம் வலியுறுத்தும் 'உணவே மருந்து' எனும் தத்துவமும் இதுவாகும். ☆

சிட்டை எழுதுநர் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு சிட்டை எழுதுநர் தேவைப்படுகின்றார். தெரிந்த, அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:
விளம்பர இல. 2413,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(37922)

கட்டட நிர்மாண மேற்பார்வையாளர் தேவை

எமது நிறுவனத்துக்குக் கட்டட நிர்மாணங்களை மேற்பார்வை செய்வதற்கு சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஆள் தேவைப்படுகிறார்.

தொடர்பு:
விளம்பர இல. 2414,
C/o உதயன், யாழ்ப்பாணம்.
or
T.P:No: 077 3039629.

(37921)

Swan சுவான் டீசல் என்ஜின்ஸ்

மிக மேன்மையான நம்பிக்கை வொரிசான்டல், 4 ஸ்ரோக் கையிருப்பு 9.5 H/P வரை உதிரிப்பாகங்கள் உண்டு

விற்பனைக்குப் பின் உயர்தர சேவை (After-sales service) வழங்கப்படும்.

எங்களை முகவர்கள்
செசுற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 தொடரி : 2337286
பெக்ஸ்: 2446534

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடம் கிடைக்கின்றன

45ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும்
தாளையடி உப அஞ்சல் அதிபருமாகிய
செல்வி மார்க்கண்டு நிர்மலாதேவி
அவர்களின் அன்புத் தந்தையார்

நாகமுத்து மார்க்கண்டு

அவர்கள் இயற்கை எய்தியமையை அறிந்து மிக்க அதிர்ச்சி அடைந்தோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை தமிழ்பேசும்
உப தபாலதிபர்கள் தொழிற்சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

(37891) (26-14-44)

20 ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னையின் மடியில்
11 - 04 - 1972

ஆண்டவன் அணைப்பில்
25 - 10 - 1984

செல்வி நிமாலினி வீரசிங்கம்

(பாப்பா)

என் அன்பு மகளே! உன்னை
இழந்து இருபது ஆண்டுகள் அவசரமாய்
ஓடி விட்டன உன் அன்னையின் கண்ணீர்
இன்னும் காயவில்லை! அம்மா கண்ட கனவுகள்
யாவும் வெறும் கானல் நீர் ஆனது!
நீயோ உன் அன்பு பாட்டியின் அரவணைப்பில்....
நாமோ இங்கு வேதனையின் மடியில்.....
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் காலத்தால் அழியாத
உன் நினைவுகள் என்றும் மாறாது!
உன் நினைவுகளைச் சுமந்து நிற்கும்....

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு நினைவுகளுடன்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.

(37833)(39-14-44-26)

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

இந்திய மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சேலம் - 636 308, தமிழ்நாடு, இந்தியா.

தாய்லந்து அரசு அங்கீகாரம் பெற்ற பாங்கொக், தாய்லாந்து Rangsit பல்கலைக்கழகம் இணைந்து நடாத்தும்
இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு

International Off-Shore Medical Program - MBBS

முதலாவது கற்கைநெறி அனுமதி அறிவிப்பு - (2004 - 2005)

இக்கற்கைநெறி

- முதல் இரண்டு ஆண்டு மருத்துவக்கற்கை நெறி, மற்றும் பயிற்சி வகுப்புக்கள் தாய்லாந்து Rangsit பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்தும்.
- அடுத்து 2-1/2 ஆண்டு மருத்துவ கற்கை நெறியும் பயிற்சியும், ஓராண்டு உள்ளகப் பயிற்சிநெறியும் இந்தியா, தமிழ்நாடு விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.
- மேற்படி கற்கைநெறிகள் யாவும் இந்திய மருத்துவக் கழகத்தின் (Medical Council of India) ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப நடாத்தப்படுகின்றது.
- விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம் - Deemed University) M.B.B.S பட்டத்தினை வழங்கும்.

தகைமைகள்

- இலங்கை அல்லது வெளிநாட்டு மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (அல்லது அதற்கு சமமானது)உயிரியல், இரசாயணவியல், பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர் - விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

சேலத்தில்
NH-47, Sankari Main Road,
Ariyanoor, Salem 636 308,
☎ 91 427 2477316, 317,833
Fax: 91 427 2477903
E-mail: vmrf@vinayakamissions.com

சென்னையில்
160 (208), Poonamalee High Road,
Kilpauk, Chennai : 600 010
☎ 91 44 2825 5060, 2811, 3776
Fax : 91 44 28241708
Email: admissions@vinayakamissions.com

www.vinayakamission.com & www.isu.ac.th

இலங்கை ஒருங்கிணைப்பாளர்
nn educonsult
181/1 W.A சில்வா மாவத்தை, கொழும்பு 06.
☎ 011 555 88 33, Fax : 011 555 88 44, Email: nnconsult@sltnet.lk

Picasso

ஒரு வருட நினைவுகளுடன்....

அன்னை மடியில்
04 - 05 - 1952

ஆண்டவன் அணைப்பில்
06 - 11 - 2003

அமரர் சின்னத்தம்பி இராசரட்ணம் (சோதி)

திதி: 25-10-2004

ஓராண்டு ஓடிச் சென்றதுவோ – அப்பா
மீண்டும் ஒருமுறை உங்கள் வதனம் காட்டீர்களோ?
நாளெல்லாம் உங்கள் நினைவுடன்
நாமெல்லாம் வாழ்கின்றோம்!

- குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
சேச் லேன், மல்லாகம்,
(37893) (26-14-44)

நிரந்தர முகவரி:
மரத்தடி, மாவிட்டபுரம்.

கொள்கை இல்லாத ஜனாதிபதியால் நாடு மீண்டும் 1970 இன் 'கியூ' யுகத்துக்கே செல்லும்

எச்சரிக்கிறார் ஐ.தே.கட்சி எம்.பி.கருணாரத்ன

உறுதியான ஒரு கொள்கையும் திட்டமும் இல்லாத ஜனாதிபதியின் ஆட்சி இந்த நாட்டை மீண்டும் 1970 இன் 'கியூ'யுகத்திற்கும் பட்டினி அவலத்துக்குமே கொண்டு செல்லும்.

- இவ்வாறு எச்சரிக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணாரத்ன. கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வாரத்தில் இரண்டு நாள்கள் சோறு சாப்படக் கூடாது. இரண்டு கொத்து அரிசிக்கு மேல் எடுத்துச் செல்லமுடியாது. பாண் வாங்கக் கூபன் அட்டையுடன் கியூவில் நிற்கவேண்டும்.

திருமணத்திற்கு சேலை வாங்க திருமண அழைப்பிதழுடன் காத்து நிற்கவேண்டும். திருமண வீட்டிலும் 25 பேருக்கு மேல் விருந்து வைக்கக் கூடாது. கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி என்பனவற்றுடன் கூட்டுச் சேர்ந்த முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இப்படித்தான் பட்டினியுகத்தை நாட்டில் அறிமுகப்படுத்தினார்.

இப்போது அவரது மகளான ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியினருடன் சேர்ந்து மீண்டும் இந்தப் பட்டினி யுகத்தைக் கொண்டு வரப் போகிறார் என்பது மட்டும் உறுதி. ஜே.வி.பியினர் தமது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு இன்று தடுமாற்றமடைந்துள்ளனர். அதிகார ஆசை அவர்களை ஆட்டிப்படைக்கின்றது. அபிவிருத்திச் சபைகள் வேண்டாம் என்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மாகாண சபைகள் வேண்டாம் என்று நாட்டையே தீவைத்து கொளுத்தியவர்கள் இன்று மாகாணசபைப் பதவிகளுக்காகப் போட்டி போடுகின்றனர்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் விருப்புவாக்குக் கேட்கமாட்டோம் என்றவர்கள் இப்போது விருப்பு வாக்குகளினால் முட்டி மோதிக் கொள்கின்றனர். இதனால் அக்கட்சிக்குள்ளேயே பூசல்கள் ஏற்பட்டுவிட்டன.

விலைவாசி உயர்வைத் தடுத்து வாழ்ககைச் செலவைக் குறைக்க 'சுவீப்' ரிக்கெட் அடிப்போம் என்றனர். வெளிநாட்டுக் கடனை ரூபாவில் செலுத்துவோம் என்ற ஆலோசனையை அமைச்சரவையிடம் சமர்ப்பித்தனர். ஆனால் இப்போது வாழ்க்கைச் செலவு விஷம் போல் அதிகரித்துவிட்டது. மக்கள் மீண்டும் பட்டினியுகத்திற்கு செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. ஆர்ப்பாட்டம் செய்தும் போஸ்டர்களை ஒட்டியுமே ஆட்சிக்கு வந்த ஜே.வி.பியினர் இப்போது வாயை மூடிக்கொண்டிருப்பது ஏன்?

இந்தியப் பொருள்கள் ஏதும்வேண்டாம். பருப்புகூட இறக்குமதி செய்யக்கூடாது என்ற ஜே.வி.பி.யினர் இப்போது இந்தியாவிடம் போய மண்டியிடுகின்றனர்.

இந்த நிலையிலும் உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் என்பவற்றின் கலப்பின்றி சுயமான வரவுசெலவுத் திட்டத்தை தாமே தயாரிக்கின்றனர் என ஜே.வி.பி.யினர் தம்பட்டம் அடிக்கின்றனர்.

ஆனால், நிதி அமைச்சின் செயலாளர் ஜயசுந்தரவோ, ஜீ.யூ.எஸ்.கப்பென்னே என்பவரை மாதம் 20 லட்சம் ரூபா ஒப்பந்தத்துக்கு அமர்திக் கொண்டு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றார் என்றார்.

(ஐ-க)

இலவச மருத்துவசேவை

யாழ்ப்பாணம்,ஒக்.25

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச நோயாளர்களுக்கான இலவச மருத்துவ சேவை சுழற்சி முறையில் நடைபெற்று வருகின்றது.

இச்சுழற்சி முறை இலவச மருத்துவ சேவை பிரதி செவ்வாய்க்கிழமைகளில் காரைநகர், வியாவில் ஐயனார் கோயில் மண்டபத்திலும், வியாழக்கிழமைகளில் காலை புளியங்கூடல் கிராம அலுவலர் அலுவலகத்திலும் பிற்பகலில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பாலர் பாடசாலையிலும் நடைபெற்றுவருகின்றன.

இந்த மருத்துவ சேவையில் காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேச நோயாளர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஊர்காவற்றுறைப் பிரிவு செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் சோ.விகனேஸ்வரன் கேட்டுள்ளார்.

(10-13)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான
கேதார கௌரி அபிசேகமும் விசேட பூசையும்

23.10.2004 முதல் 12.11.2004 வரை நடைபெறும்.
விரதகாரர் தமது பெயர், நட்சத்திரத்தை
ஆலய பணிமனையில் பதிவுசெய்துகொள்ளுமாறு
வேண்டப்படுகின்றனர்.
அம்பிகையின் இராஜகோபுர நிர்மாண வேலைகள்
நடைபெறுவதால் அதற்குரிய பாவைகளின் செலவினை
ஏற்க விரும்பும் அடியார்களை
ஆலய தர்மகர்த்தா சபையினருடன் தொடர்பு
கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

(சி-38839)(32-13-16) ~ தலைவர்.

கல்வியியல் கல்லூரி மலசல கூட நெருக்கடி; சில தினங்களில் தீர்வு என்கிறார் பீடாதிபதி

மாணவர்களைப் பழிவாங்குவது நிர்வாகத்தின் நோக்கம் அல்ல என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.25

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் மாணவர்கள் பயன்படுத்தும் மலசலகூடக் குழிகள் நிறைந்ததால் உருவாகிய நெருக்கடி நிலை அடுத்த சில தினங்களில் நீங்கிவிடும் என்கிறார் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன்.

கல்வி அமைச்சின் நிதி உதவியுடன் புதிய மலசலகூடம் நிறுவும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் சில தினங்களில் வேலைகள் பூர்த்தி அடைந்தவுடன் மாணவர்கள் மீண்டும் விடுதிகளுக்கு அழைத்துக்கொள்ளப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

மலசலகூட நெருக்கடியைச் சாட்டாக வைத்து மாணவர்கள் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு குறித்து கவலை வெளியிட்ட அவர், அத்தகைய நோக்கத்துடன் நிர்வாகம் செயற்படுவதாக மாணவர்கள் தமக்குள் எண்ணிக்கொளவது வேதனை அளிப்பதாகவும் தெரிவித்தார்.

கல்வியியல் கல்லூரியில் மலசலகூடக் குழிகள் நிறைந்ததால் உருவாகிய சுகாதார நெருக்கடியை அடுத்து மாணவர்களை கல்லூரி நிர்வாகம் தற்காலிகமாக வெளியேற்றி இருப்பது தெரிந்ததே.

நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக மாணவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வே.யுகபாலசிங்கம் அவர்களின் அருமைத் தாயார்

திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

வெளிவாரி பட்டப்படிப்புகள் இயக்குநர்,
கல்லூரி, யாழ்ப்பாணம். (சி-38834) (32-13-16) விரிவுரையாளர்கள்

மரண அறிவித்தல்கள்

வைரமுத்து சுப்பிரமணியம்

(முன்னாள் பொது வேலைப் பகுதி உத்தியோகத்தர் - சிமெந்து கூட்டுத்தாபனம்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சுப்பிரமணியம் 24.10.04 அன்று காலமானார்.

அன்னார் முத்துமாரியின் அன்புக் கணவரும் வைரமுத்து-சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), செல்லம்மா ஆகியோரின் சகோதரனும் வைகுந்தநாதன், செந்தில்நாதன், சிறிதரன், முரளிதரன், பத்மலோஜினி, கமலலோஜினி, நிமலலோஜினி, மீனலோஜினி, புஸ்பலோஜினி ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று (25.10.2004) திங்கட்கிழமை பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்

கிருஷ்ணபிள்ளை
வைகுந்தநாதன்
K.K.S. RD (சி-38842)(32-17-16)

தகவல்:
கி.செந்தில்நாதன்
(வதனா களஞ்சியம்)

திருமதி கந்தசாமி கனகம்மா

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி கனகம்மா அவர்கள் நேற்று (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சிவகுமார் (ஜேர்மனி), சாந்தகுமார், சத்தியகுமார், (ஜேர்மனி), கலைமகள் (ஜேர்மனி), அகிலகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தராணி (ஜேர்மனி), ஜெயராணி, டானிக் (ஜேர்மனி), குகப்பிரியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜன், வினோதன், வினோதா (ஜேர்மனி), மக்கி, தீபன், யனிக், திபிசா, நிதுசா, மதுசன், மதுரா, ஜெனனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2004) திங்கட்கிழமை பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, உயத்தியோடை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-38841)(32-13-16) தகவல்:
கந்தசாமி சாந்தகுமார் (மகன்)

செல்வி அமரசிங்கம் தர்சினி

(மண்கும்பான் அ.த.க. பாடசாலை மாணவி)

மண்கும்பானைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி அமரசிங்கம் தர்சினி அவர்கள் நேற்று (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் ராணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் இந்திரகுமார் (குமார்), வசிகரன் (வசி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2004) திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் ஒரு மணியளவில் மண்கும்பான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான்,
5 ஆம் வட்டாரம், வேலணை (37955)(32-13-16)

தகவல்:
குடும்பத்தினர்.

Smart Prints
DISSERTATION Binding
பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆய்வுக்கட்டுரைகள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப நவீன தொழில்நுட்ப முறையில் அழகாக பைண்டிங் செய்து தரப்படும்.
சிமாட் பிறிண்டேர்ஸ்,
717, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
Call me @ 0777 917630, 0776 038312

ராஜா யாழ்ப்பாணம்
இப்போது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G ரெயின்போ கொலனி (ரீலிஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38841)

நூகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்
போஸ் (ரீலிஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே)
(சி-37410)

நிறைஸ்ரீனாஸ் சங்கானை
சூரியா, மாதவன், தரிஷா மற்றும் பலர் நடிப்பில்
ஆயுத எழுத்து (ரீலிஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
TYCUS வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.
(சி-37951)

சிற்றி சினிமா பண்டத்தரிப்பு
M.G.R., ராதா சலூஜா. வீரப்பா நடித்த
இதயக் கனி (ரீலிஸ்)
காட்சிகள் தினசரி: 3.00, 7.00 (பு.நே)
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

நல்லூர் றோட்டறக்ட் கழகம்

எமது கழகத்தினுடைய 4ஆவது நிர்வாக சபையானது நாளை (26.10.2004) செவ்வாய்க்கிழமை கழகத் தலைவர் Rtr. PP. துரைமணி ரமணன் தலைமையில் பதவி ஏற்கவுள்ளது. இந்நிகழ்வானது திட்ட இயக்குநர் Rtr.S.யாழினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இடம்: கழக ஒன்றுகூடல் மண்டபம்,
(16/2, சீனியர் லேன், கலட்டி,
யாழ்ப்பாணம்)
காலம்: 26.10.2004 (செவ்வாய்க்கிழமை)
நேரம்: மு.ப.10.00 மணி (பு.நே.)

றோட்டறி, றோட்டறக்ட் மற்றும் இன்ரறக்ட் கழகங்களின் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Rtr.S.யாழினி
நல்லூர் றோட்டறக்ட் கழகம் (திட்ட இயக்குநர்)
(சி-38838) (32-13-16)

கண்ணீர் அஞ்சலி

அருட் தந்தை
அ.மைக்கல்சாமி
அ.ம.தி.

வண.தோமஸ் அடிகளாரின்
செபதப வாழ்வை
வளமுடன் வாழ
வழிகாட்டியாய் விளங்கி
இறையன்பிற்கும் பிறரன்பிற்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்து
விசுவாசவாழ்வை வீரமுடன் வாழ்ந்து
28.10.2004இல் இறையடி சேர்ந்த
யாழ்.மறைமாவட்ட முன்னாள் முதன்மைக்குரு
அருட்தந்தை மைக்கல்சாமி அவர்கட்கு
இறைவன் நித்திய சாந்தியை
நிறைவாய்க் கொடுக்க எமது
செபதவங்களை ஒப்புக்கொடுக்கின்றோம்.

செபமாலைத் தாசர்
செபமாலைக் கன்னியர்.
(37957)(32-13-16)

வரவு-செலவுத் திட்டம் தயாரிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது சந்திரிகா அரசு

உலக வங்கி, ஆசியவங்கி உதவ மறுத்துவிட்டன என்கிறார் பந்துல

கொழும்பு,ஒக்.25

இந்த அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியாமல் தடுமாறுகிறது. உறுதியான எந்த ஒரு அபிவிருத்தித் திட்டமும் இல்லாததனால் உலகவங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவி வழங்க மறுத்துவிட்டதே அரசின் தடுமாற்றத்திற்கான காரணம் என்கிறது ஐ.தே.கட்சி.

"வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னரே 10 ஆயிரம் கோடி ரூபாவை உலக நாடுகளிடமிருந்தும் சர்வதேச வங்கிகளிடம் இருந்தும் கூடுதலான வட்டிக்குக் கடனாக பெற்றுவிட்ட அரசாங்கம் அடுத்த நிதியாண்டிற்கான செலவினத் தொகையை எப்படிப் பெறுவது என்று விழி பிதுங்கிப்போய் உள்ளது."- என்று குற்றம் சுமத்துகின்றார் முன்னாள் பிரதி நிதி அமைச்சரும் ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தன.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்திடம் உறுதியான ஒரு பொருளாதார கொள்கை இல்லாததனால் அதனால் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பொருள்களின் விலைகள் வால அறுந்த பட்டம்போல் தொடர்ந்து உயர்ந்தே செல்கின்றன.

உலக சந்தையில் எண்ணெயின் விலை அதிகரிப்பைக் காரணமாகக் காட்டிக்கொண்டு பொது மக்கள் மீது சுமையை ஏற்றுகின்றது அரசு.

இவ்விடயத்தில் நாம் இந்தியாவைப் பின்பற்ற வேண்டும். இந்திய அரசு எண்ணெய் இறக்குமதி மீதான வரியை தற்காலிகமாக ஏற்றச் செய்துவிட்டு பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி உள்ளது.

ஆனால், இங்கோ எண்ணெய் இறக்குமதிக்கான வரியையும் அதிகரித்துவிட்டதோடு விலையையும் அதிகரித்துவிட்டது அரசு. இதனால் பொது மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில் பொருளாதாரத் துறையில் முன் எப்போதுமில்லாத வகையில் இந்த ஆண்டு மிக மோசமான ஆண்டு எனக் கண்டித்துள்ளது.

பணவீக்கம் அதிகரித்துவிட்டது. வெளிநாட்டு கடன்கள் தடைப்பட்டுவிட்டன. வெளிநாட்டு முதலீடுகள் இல்லை. வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித் துள்ளது. அரசியலில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. சமூக அமைதியின்மை அதிகரித்துள்ளது. இதனால், வெளிநாட்டு செலாவணி வரவும் மந்தமாகிவிட்டது என மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் மூடி மறைப்பதற்காகவே அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க் கட்சித்தலைவர் ரணில் பிரதமராக இருந்தபோது நடைமுறைப்படுத்திய வெளிநாட்டு ஆலோசகர் சேவை தொடர்பாக சேற்றை வாரி வீசுகின்றார்.

மங்கள சமரவீர மழைக்குக் கூட பல்கலைக் கழகத்தின் பக்கம் ஒதுங்காதவர். இவருக்கும் பொருளாதாரம் தெரியாது. அரசியலும் தெரியாது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் கொள்கை திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல்கள் அமைச்சராகவும் இருந்தவர்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் உதவியுடன் இங்கு மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தித் திட்டங்களும் உள்நாட்டு வெளிநாட்டு ஆலோசகர்கள் உடன் இருந்து அவ்வப்போது ஆலோசனைகளை வழங்குவது வழமை. அவர்களுக்கான சம்பளத்தையும் உலக வங்கியே வழங்கும். இந்த உண்மையைக்கூட அறிந்து கொள்ள முடியாத மங்கள சமரவீர முன்னாள் பிரதமர் வீணாகப் பணத்தைச் செலவிட்டார் எனக் கூறுகின்றார்.

மங்கள சமரவீர முன்னைய அரசின் மீது வசைபாடினால் மட்டும் உலகவங்கி கடன் வழங்காது.

உருப்படியான திட்டங்களை அரசு முன் வைக்கவேண்டும் - என்றும் பந்துலகுணவர்த்தன எம்.பி. கூறினார். (ஐ-க)

மண்கும்பானில் பலத்த காயங்களுடன் வீதியில் காணப்பட்ட 3 இளைஞர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.25

பலத்த காயங்களு[illegible] கிடக்கக் காணப்பட்டனர் எனக் [illegible] இளைஞர்கள் மிகவும் ஆபத்தான [illegible]லையில் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.அருடசீலன் (வயது-30) நல்லூர் கோவில் வீதி, சர்வானந்தநாதன் (வயது-30) பூநகரி, நடேசன் (வயது-28) வேலணை ஆகியோரே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மண்கும்பானில் உறவினர் ஒருவரின் மரண வீட்டுக்குச் சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பியவழியில் இவர்கள் மண்கும்பான் கழுத்தம்பனை ஆலயத்தடியில் பலத்த காயங்களுடன் வீதியில் கிடக்கக் காணப்பட்டனர் என்று மண்கும்பானிலுள்ள இவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் சேதம் ஏதும் இன்றிக் காணப்பட்டது. இவர்களில் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார். இன்னொருரின் கை சிதவடைந்த நிலையிலும், அடுத்தவர் மயக்கமுற்ற நிலையிலும் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் எவ்வாறு காயமடைந்தனர் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-13)

சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]நும் அரசாங்கம், ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உடுவே தம்மாலோக்க தேரரை அப்பதவிக்குப் போட்டியிடச் செய்வதன் மூலம், அக்கட்சியினரின் ஆதரவைப் பெற்று, அவரைத் தமக்குச் சார்பானவராக மாற்றிக்கொள்ளலாம் என்று கருதுவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. (ஐ-13)

சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]யான நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது.

சர்வதேச சமூகத்தினரும் நோர்வே அனுசரணையாளர்களும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் கரிசனையுடன் செயற்பட்டுவருகின்றனர். பேச்சுக்கள் தொடர்பாக புலிகளின் ஆர்வத்தையும் நிலைப்பாட்டையும் அவர்கள் அறிந்த வண்ணமுள்ளனர்.

ஒரு தரப்பினரின் நிலைப்பாட்டை மட்டும் வைத்துக்கொண்டு பேச்சுக்கான திகதியைக் குறிக்கமுடியாது. எனவே, ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் நிலைப்பாட்டை அறிந்த பின்னரே அவர்களால் எதனையும் தீர்மானிக்க முடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பானது எமது தலைவரின் தலைமையின் கீழ் மிகவும் கட்டுக்கோப்பாக உள்ளது. எனவே, எந்தவொரு குழப்பத்திற்கோ தேவையற்ற வதந்திகளுக்கோ இடமில்லை என்றார்.

(ஐ-10-13)

ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையையே அரசுத் தரப்பு 'ஒஸ்லோ பிரகடனம்' என்கின்றது. 'அது பிரகடனம் அல்ல, நோர்வேத் தரப்பு விடுத்த வெறும் அறிக்கை மட்டும்' என்று புலிகள் தரப்பில் கருத்துக் கூறப்படுகின்றது.

எது எப்படியென்றாலும் புலிகள் தற்போது முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அமைப்பையும் கடந்து, இரு சமஷ்டிகள் சேர்ந்து உருவாக்கும் கூட்டாட்சி முறையையும் தாண்டி நிற்கின்றன என்று அரசுத் தரப்புக் கூறுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே 'ஒஸ்லோ உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்கு தமது அரசு தயார் என்ற விவரத்தை ஜனாதிபதி அறிவிக்க இருக்கிறார் என்றும் - அதற்குத் தாமும் இணங்குகின்றார் என்பதைப் பகிரங்கப் பிரகடனம் மூலம் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெளிவுபடுத்த வேண்டும் என ஜனாதிபதி தமது அறிவிப்பில் கோருவார் என்றும் - கூறப்படுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது உட்படப் பல்வேறு விடயங்களுக்காக அரசமைப்பை மாற்ற வேண்டியிருப்பது குறித்தும் - சர்வஜன வாக்கெடுப்பு மூலம் - மக்கள் அனுமதி பெற்று - தாம் அதைச் செய்யப்போகின்றார் என்பது பற்றியும் -

ஜனாதிபதி இந்த அறிவிப்பில் தகவல் வெளியிடுவார் எனவும் கூறப்படுகின்றது.

(ஐ-க)

சம்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளால் அமைக்கப்பட்டு வருவதாகவும்-

இந்தத் தகவல் பரிமாற்றுக் கோபுர நிர்மாணப் பணிகளை குருநாகலைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவரே மேற்கொண்டு வருவதாகவும், - அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூர் பகுதிக்கு சிமெந்து கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை விமான ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்காகவே கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என சிறிலங்கா படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-10-13)

வணக்க ஸ்தலங்களை பாதுகாக்க ஏற்பாடு

கொழும்பு,ஒக்.25

வரலாற்றுப் பெருமைவாய்ந்த வணக்க ஸ்தலங்களைப் பாதுகாக்க விசேட திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்தகவலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் பன்னகிரிய ராஜ மஹா விகாரையின் முடிக்கலசத்தைத் திரை நீக்கம் செய்துவைத்து உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டு ஸ்தலங்கள் உல்லாசப் பயணிகள் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதாக அமைகின்றன.

இதன் மூலம் கிராமப்புறங்களின் வருமானங்களை அதிகரிக்க முடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

பின்கதவினாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள் அதிகளவு மூக்கை நுழைக்கின்றது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கட்டளையகத்தின் கொள்கை உத்திவகுப்புக்குப் பொறுப்பான ஜெனரல் ஒருவர் யாழ்ப்பாணம், பலாலி படைத்தளத்துக்குச் சில தினங்களுக்கு முன் நேரடியாக விஜயம் செய்தமை வரை இலங்கையில் அமெரிக்காவின் பல்வேறு நடவடிக்கைகள் இந்தியத் தரப்பை நிலை குலையவைத்திருக்கின்றன எனவும் -

அதனாலேயே இலங்கையை தனது வழிக்குக் கொண்டுவருவதற்காக முன்பக்கமாக ஆசை காட்டி வரவளைத்துப் போட்டும் -

பிற்பக்கமாக தன்னுடைய வேறு ஏவல் சத்திகளை ஊடுருவ வைத்துத் தன் கையைப் பலப்படுத்தியும் - இலங்கை விடயத்தைக் கையாள இந்தியா முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அந்த முடிவுகளின்படியே இப்போது நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை - இந்திய கட்டுப்பாடற்ற வர்த்தக ஒப்பந்தம், இலங்கை எரிபொருள் விநியோகத்தில் இந்தியக் கம்பனிகளின் ஏகபோக உரிமை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் பொருளாதார விடயத்தில் தனது செல்வாக்கை உயர்த்தச் செய்து அதன் வாயிலாகவும் இலங்கையைத் தனது வழிக்குக் கொண்டுவர முடியும் என்று கருதியும் இந்தியா செயற்படுவதாகக் கூறப்பட்டது. (ஐ-க)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
MOBILE NET MCS COMPUTER SERVICES
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
MCS
பதிவுகள் 29/10/2004 இற்கு முன் நேரில்
SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW

'இயேசுவே ஆண்டவர் எம் மீட்பர்'

இறைத்தியான அடியார்களுக்கு
ஒரு நற்செய்தி!
முதல் முறையாக எமது மறைமாவட்டத்தில்
தமிழ்நாடு, இந்தியாவிலிருந்து வருகைதரும்
உலகெங்கும் பிரசித்திபெற்ற
அருட்திரு வி.இக்னேசியஸ் யே.ச.
அடிகளாரால் நடத்தப்படும்
இறைத்தியான குணமாக்கல் வழிபாடுகள்
நவம்பர் 8 முதல் 14 வரை

08 திங்கள் மாலை 5.30 முதல் 9 மணிவரை:
யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்றில்
09 செவ்வாய் மாலை 5.30 முதல் 9 மணிவரை:
மாவிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றில்
10 புதன் மாலை 5.30 முதல் 9 மணிவரை: குருநகர்
11 வியாழன் காலை 9.00 முதல் 12 மணிவரை: கிளிநொச்சி
11 வியாழன் மாலை 5.30 முதல் 9 மணிவரை: முல்லைத்தீவு
12 வெள்ளி காலை 10.30 முதல் 1 மணிவரை:
புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர் (நோயாளர்கட்கு மட்டும்)
12 வெள்ளி மாலை 5.30 முதல் 9 மணிவரை: கரம்பன்
13 சனி காலை 9.30 முதல் 12 மணிவரை: குருக்கள் துறவியர்க்கு: ஆயர் இல்லத்தில்
13 சனி மாலை 5.30 முதல் 9 மணிவரை: தும்பளை
14 ஞாயிறு காலை 10 முதல் 1 மணிவரை:
இளையோர் யுவதிகட்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்
14 ஞாயிறு மாலை 5 மணி முதல் 9 மணிவரை: யாழ். பேராலய மைதானம்

● அருட்திரு இக்னேசியஸ் அடிகளாரால் வெளியிடப்படும் 'இயேசுவே ஆண்டவர்' மாதாந்த சஞ்சிகை மற்றும் துதிகீதங்கள் CD, ஒலி நாடாக்கள் என்பன வழிபாடுகள் நடைபெறும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்ய விரும்புவோர் வழிபாட்டு நிலைய செயலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

இறைதியான குழுவினர் ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

(37932(30))

CHEMISTRY நாவலர் ஆனைப்பந்தி
DIAS B.Sc. (Hons) Sp.Chem.
பங்கீட்டுக் குணகம் ஆரம்பம்: 27.10.2004
Tu., We., Th. - 6.30 a.m.
(37956)

NEW SCIENCE CENTRE
- யாழ்நகர் -
வெளிமாவட்ட மாணவர்களுக்கான
CHEMISTRY DAY CLASS
பிரிவு - II
(சி-38837)
பொது, அசேதன இரசாயன வினாவிடை
உடனடி ஆரம்பம்:
Mon., Wed., Fri. - 11.00 - 12.00 a.m.
ORGANIC CHEMISTRY
ஆரம்பம்: 25/10 இன்று 12.00 - 1.00
Mon., Wed., Fri. - 12.00 - 1.00
By: அன்பழகன் B.Sc.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.